மக்கள் சிந்தனையைத் தூண்டும் நூல்கள் இயற்றுவதற்கு, மக்கள் வீரம் அடைவதற்கு, நீதியை நடுநின்று நோக்குதற்கு, சாதி பேத சமயச் சண்டைகளை ஒழிப்பதற்கு, பொருளாதார மாறுபாட்டை மடிப்பதற்கு, புத்துலகம் சமைப்பதற்கு, கயமைத்தனமான கண்மூடி கபோதி பழக்க வழக்கங்களை மதத்தின் பேரால், சமயத்தின் பேரால், சாஸ்திரத்தின் பேரால், பழமையின் பேரால், பின்பற்றி வறுமையில் மடமையில் கண்மூடித்தனத்தில் மக்கள் மருண்டு, உழலும் மாயா மார்க்கத்தை வேரறுப்பதற்கு, அவசியமானவற்றை அணைந்து பற்றி அல்லாததை அகற்றி, எதையும் பகுத்துணர்ந்து பார்க்க வழிகோலும் ஏடுகள் இயற்றினார்களா? இயற்றுகின்றார்களா? இக்கால இலக்கியக் கர்த்தாக்கள் இனியேனும் இயற்றுவார்களா?

நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பில்லா வகையிலே நாட்டின் இனத்திற்கு இம்மியும் பயன்படாக் காவியங்களும் ஏட்டில் எடுத்தியம்புவது ஒன்றாயும் எண்ணத்திலே வேறாயும் அன்றாட வாழ்க்கையில் நாட்டில் நடப்பது பிறிதொன்றாயும் ஏடுகள் அமைக்கப்படும் வரை இனம் எழுச்சியுறுமா? மக்களிடையே உள்ள மடமைத்தனம் மறையுமா?

ஏட்டின் மூலம் நாட்டின் நிலையறியலாம். மேனாடுகளிலே இது சர்வ சாதாரணம். அவ்விதம், நாட்டின் நிலை நவிலா ஏடு மாளட்டும். இலக்கியம் இறக்கட்டும், கலை கலையட்டும். நமக்கு வேண்டுவது: ஏட்டைப் புரட்டினால் நாடு, நாட்டின் மக்கள், மக்கள் வாழ்க்கை, அவர்தம் வாழ்க்கை வளன், நாகரிகம் – இன்ன பிற யாவும் தெள்ளிதின் விளங்குதல் வேண்டும். அது ஏட்டோடு நிற்றல் சாலாது. நடைமுறையில் நடப்பதையே நவிலும் நூலாதல் வேண்டும்".

(அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள், முதல் பதிப்பு: 1945.
தமிழ் உலகம் காரியாலயம், சென்னை)

**பேரறிஞர் அண்ணா**

# DECONSTRUCTING DHARMA: GENDER POWER AND THE MANUSMRITI

Bhavadharini Kandhasamy





Dr.Veeramani Ramachandran

**Abstract**

*The Manusmriti is one of the most important Hindu legal and ethical texts, traditionally attributed to the sage Manu. It is a part of Dharmashastra literature and has had a profound influence on Hindu law, social norms, and religious thought across centuries. It addresses all aspects of human life from cosmogony and moral philosophy to legal and social regulations. Manusmriti's depiction of women showcases them as libidinous creatures, who need to be kept under control by the male authoritative figures in their lives. Feminist analyses argue that Manusmriti institutionalized gender inequality, shaping social customs that marginalized women for centuries. Manusmriti presents a hierarchical worldview in which, women must remain under male guardianship throughout life.*

**Keywords:** *Manu Smriti, Hindhu law, Social norms, Feminism, Gender inequality*

## Introduction

The Manu-smriti is one of the most important and authoritative legal texts followed in Hinduism. It is also widely known as Manav Dharma Sastra or The Laws of Manu. The text is said to be written by the first law-giver, Manu, in Sanskrit language. The Manusmriti is also known as Manava-Dharmaśāstra or The Laws

of Manu. It is one of the most important Hindu legal and ethical texts, traditionally attributed to the sage Manu. It forms part of the Dharmashastra literature and has had a profound influence on Hindu law, social norms, and religious thought across centuries. Compiled around the Second century BCE to Second century CE, the Manusmriti consists of twelve chapters and approximately 2,684 verses written in Sanskrit. It addresses all aspects of human life from cosmogony and moral philosophy to legal and social regulations.

Its chapters cover duties of the four social classes (varna), the four stages of life (ashrama), sacraments, education, marriage, laws of inheritance, and governance. The text supports a hierarchical social order based on the varna (caste) system, prescribing detailed duties for Brahmins (priests), Kshatriyas (warriors), Vaishyas (merchants), and Shudras (servants).

Manu Smriti has been criticized for its endorsement of caste distinctions and for passages that place women in a subordinate position relative to men, requiring them to be under the guardianship of fathers, husbands, or sons. Such aspects have drawn intense modern criticism and debate regarding equality and human rights. Historically, Manusmriti influenced Hindu law codes and social practices. However, its authority has not been uniform across time. Many Social reformers, such as Dr. B. R. Ambedkar, Jyotiaro Phule and Periyar E.V.R strongly opposed it for legitimizing caste discrimination. Some Hindu traditions hold that Manusmriti is not applicable in the current age, that is Kali Yuga.

## Manusmriti as a Patriarchal Text

The Manusmriti has been widely criticized for its patriarchal and discriminatory portrayal of women. While it does contain some verses advocating respect for women, much of the text reflects an ideology that subordinates women to men in every stage of life and restricts their autonomy. The Manusmriti explicitly states that a woman must always remain under male guardianship, her father when a girl, her husband when married, and her sons in widowhood. Verse 9.3 says: "Her father guards her in childhood, her husband guards her in youth, and her sons guard her in old age; a woman is never fit for independence." This language institutionalizes lifelong male control over women. Denial of Autonomy and Rights of Women in Manusmriti are denied independent access to education, legal autonomy, and religious life. Verse 9.18 states that women have no dealings with sacred texts, a reflection of the notion that they are unfit for spiritual and scholarly pursuits. Similarly, women cannot serve as witnesses in court because they are considered 'untrustworthy by nature.' The text defines their primary role as serving their husbands and producing offspring.

## Objectification and Sexual Control

The text uses metaphors that objectify women as property or fields for male 'seeds.' In verse 33.9, a woman is described as 'the field' while the man is 'the seed,' suggesting that her role is

mainly reproductive. Other passages present women as inherently lustful and untrustworthy (9.14–16), asserting the need for constant vigilance by men to prevent moral corruption. The underlying assumption is that women's sexuality must be controlled for social order and lineage purity.

## Unequal Moral Standards

According to Manusmriti, adultery by women warranted severe punishment, public humiliation or even death, while men faced lighter consequences. A husband's authority was absolute: a 'good woman' was expected to obey and revere her husband regardless of his moral character, even if he was 'addicted to evil passions'. Prohibition of Remarriage and Freedom. The text allows men to remarry but forbids women from doing so under any circumstances, declaring that a widow must never mention another man's name. Even if abandoned or widowed, she is to remain loyal to her husband's memory for life. This system reinforced social and economic dependence on male relatives. Modern scholars and reformers view these doctrines as reflections of the patriarchal structures of ancient society. Feminists argues that Manusmriti institutionalized gender inequality, shaping social customs that marginalized women for centuries. Reformers like Dr. B. R. Ambedkar publicly denounced the text, burning copies of it in protest against its anti-women and casteist ideology.

In essence, Manusmriti portrays women not as independent individuals but as dependents and subjects of male authority. Its legacy in reinforcing gender hierarchy remains one of the most controversial aspects of Hindu social history. Women are portrayed as sexually promiscuous, secret, sly, and out to capture men. Their bodies are frequently objectified and more often devalued as eliciting disgust.

> *-[67:2]The ritual of marriage is traditionally known as the Vedic transformative ritual for women; serving her husband is (the equivalent of) living with a guru, and household chores are the rites of the fire.*

According to Nazeera & Kuruvilla, sexuality became the primary site for control of women through Manu. In Manu, women are described as sexually promiscuous, sly, wicked, secretive, and out to hunt and capture men. They are objectified and their bodies are sexualised. Manusmriti's depiction of women showcases them as libidinous creatures, who need to be kept under control by the male authoritative figures in their lives - father and husband. Their fundamental essence was that of high libido and uncontrolled and troubling carnal needs.

> *-[213:2]It is the very nature of women to corrupt men here on earth; for that reason, circumspect men do not get careless and wanton among wanton women.*

Women are perilous, according to Manu, because even a respectable man may lose his honor in their presence. He claims that even a scholarly man, such as a priest, should exercise caution and vigilance when around women. Manu views women as sexualized objects and frequently as objects of pleasure,

particularly for men from higher castes. Manu suggests avoiding meetings at all costs because, in his opinion, women are only interested in seduction and a decent man could easily lose his honor due to their strong sexual cravings.

> *-[215:2]No one should sit in a deserted place with his mother, sister, or daughter; for the strong cluster of the sensory powers drags away even a learned man.*

A woman has little control over her life and is expected to comply with all of her husband's orders. She must always be faithful to her husband and comply with all of his requests without raising an objection. A good wife serves and worships her husband like God, is quiet, and modest. The way a wife acts toward her husband is independent of how the husband acts toward her; a good wife must uphold her responsibilities even if the husband is violent, abusive, freely indulges his lust, and lacks any virtues. She is not allowed to criticize her husband or point out his errors.

Manusmriti's depiction of women has drawn harsh criticism. Every facet of a woman's life—economic, social, political, and sexual—is attempted to be restricted. Manusmriti is the pinnacle of patriarchal society and injustice. Dr. B.R. Ambedkar notes that Manusmriti has drawn harsh criticism for its discriminating and misogynistic viewpoints.

> *The view of the women was both an insult and an injury to the women of India. It was an injury because, without any justification, she was denied the right to acquire knowledge which is the birthright of every human being. It was an insult because after denying her the opportunity to acquire knowledge, she was declared to be as unclean as untruth for want of knowledge and therefore not allowed to take sanyas, which was regarded as a path to reach Brahma. (as cited in Rege, 2013, p.121).*

Manusmriti promotes child marriage by advocating for young girls to be married off. By asserting that a wife must treat her husband like God even if he lacks any divine attributes, it encourages harsh and violent partnerships. It confines women to a life of slavery and robs them of their agency. In summary, it causes them to be mistreated, oppressed, and deprived of their dignity. It argues that the wife must satisfy all of her husband's wants and requirements, which is a case for marital rape. In addition to portraying women as sex objects, particularly for men from higher castes, it simultaneously encourages sexual aggression against women and the caste system while attempting to stifle their sexuality.

Manusmriti accuses women of being seducers, making them accountable for any wrong inflicted upon them. In any instance of physical or sexual aggression, the victim is held accountable. Abortion rights and women's freedom of speech are expressly forbidden under Manusmriti. It becomes culturally acceptable to govern women based on such dictums. Manusmriti seems to make a judgment about women without considering alternative strategies or the advantages of empowering women. Because the majority of Manu-smriti's teachings are

out of step with contemporary culture, it is deemed irrelevant in today's world. After Sir William Jones translated the text, it became a highly significant topic during British colonial control in India from Sanskrit and utilized it to create a Hindu common law. Many people characterize it as an attempt by the British to carry out their divide and conquer policy by targeting Indians' religious beliefs.

Manusmriti presents a hierarchical worldview in which, women must remain under male guardianship throughout life. Caste determines moral worth, occupation, and social rights. Social order is maintained through strict purity–pollution rules. In contrast, the Indian Constitution, shaped by Ambedkar's anti-caste vision, enshrines, Equality before law (Article 14), Prohibition of discrimination on grounds of sex, caste, or religion (Article 15), Freedom and dignity for all individuals (Articles 19 & 21).

Periyar insisted on total dismantling of patriarchal scriptures like Manusmriti, not mere reform. He placed caste at the centre of women's oppression, arguing that gender inequality in India cannot be separated from Brahminical dominance. He promoted self-respect marriage, widow remarriage, birth control, and women's sexual autonomy issues even mainstream feminists were hesitant to foreground. He criticized religious institutions, gods, rituals, and priesthood as tools of women's subordination. Caste purity is maintained by controlling women's sexuality. Brahmin male authority is upheld through rituals, laws, and social norms.

**Conclusion**

Religious texts like Manusmriti legitimize both women's subordination and caste hierarchy. In contrast, Ambedkar and Periyar, through rationalist and anti-caste philosophies, argued for, the complete annihilation of caste-based hierarchy. Equality rooted not in tradition but in individual dignity and scientific reasoning. Liberation of women as essential for dismantling caste. The rejection of religious authority over personal rights. Ambedkar criticised Manusmriti for institutionalising caste and patriarchal injustice. Periyar went further, calling for its outright destruction as a symbolic act against Brahminical domination through Manusmriti. Together, their rationalist frameworks promote a society based on equal rights, freedom of choice, social justice, secular and scientific ethics.

**Works Cited**


Ambedkar, B.R. Editorial. Hindustan Times. 25 August, 1996.

Hirday N. Patwari. *Women as depicted in the Manusmriti* by Modern Rationalist, December 23, 2020.

*Manusmriti,* The Oxford International Encyclopedia of Legal History, Oxford University Press, 2009.

Naseera. N. M., and Kuruvilla, Moly (2022). *The Sexual Politics of the Manusmriti: A*

*Critical Analysis with Sexual and Reproductive Health Rights Perspectives. Journal of* International Women's Studies, Virtual Commons - Bridgewater State University.

https://vc.bridgew.edu/jiws/vol23/iss6/3/

Sarvananda, Manusmriti Criticism: Unpacking Historical and Modern Contexts

October 9, 2024.

**Author's Note**

***I am Mrs. K. Bhavadharini,*** *M.A., M.Phil., (English), currently pursuing my Ph.D., as an Internal Part-time Research Scholar at Periyar Maniyammai Institute of Science and Technology, while serving as Assistant Professor in the Department of Languages. My lifelong thirst for literature has shaped both my academic journey and my creative pursuits. I am deeply passionate about poetry writing, playing the veena, and singing Carnatic music. I am highly concerned about Ecology and Sustainable living.*

*My concern for society made me choose this area as the focus of my research paper. The reforms and ideals of Thanthai Periyar and Aasiriyar K.Veeramani Ayya have profoundly influenced my thinking, inspiring me to question oppressive traditions and envision a more enlightened society. With the guidance and encouragement of my Research Supervisor, Dr. B. R. Veeramani, I have written this article with the hope of lifting women from darkness into light.*

*Even today, many remain bound by superstitious beliefs rooted in Manusmriti. It is time to rise above such oppressions, to think critically, and to embrace liberation. My work is a humble contribution toward that awakening.*

***Dr. B.R.Veeramani*** *is Professor of Languages at Periyar Maniammai Institute of Science & Technology, Thanjavur, with over three decades of experience in higher education and research. He previously served as Associate Professor of English at A.V.V.M. Sri Pushpam College, Poondi, where he mentored generations of students and scholars in literary studies.*

*Dr. B.R.Veeramani holds a Ph.D,. in English Literature from Tamil University, Thanjavur, and has earned degrees from Bishop Heber College, Annamalai University, and St. Joseph's Higher Secondary School, Tiruchirappalli. His research spans postcolonial literature, environmental humanities, ideological critique, and English language pedagogy.*

*He has authored thirty-two international research papers and edited nine books, contributing significantly to the discourse on literature and cultural transformation. Ten scholars have completed their Ph.D., under his guidance, and ten more are currently pursuing research under his mentorship.*

*He is widely recognized for his interdisciplinary approach, combining literary analysis with philosophical and cultural inquiry. His work continues to inspire critical engagement and academic excellence across institutions.*

## Impact of Science on Society.

"It is not by prayer and humility that you cause things to go as you wish, but by acquiring a knowledge of natural laws.

The power you acquire in this way is much greater and more reliable than that formerly supposed to be acquired by prayer, because you never could tell whether your prayer would be favorably heard in Heaven.

The power of prayer, moreover, had recognized limits; it would have been impious to ask too much. But the power of science has no known limits. We were told that faith could remove mountains, but no one believed it; we are now told that the atomic bomb can remove mountains, and everyone believes it".

**(The Impact of Science on Society, p15 - 1951)**

**BERTRAND RUSSELL**

# வள்ளுவர் பார்வையில் அறம்



முனைவர் **இரா. பிரபாகரன்**

**ஆய்வுச் சுருக்கம்:**

*'பல்வேறு நாகரிகங்களில் சிந்தனையாளர்கள் ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதன் பொருள் என்ன என்பதை விளக்க முயன்றுள்ளனர்' என்று சுட்டும் இக்கட்டுரை அதற்கு உலக அளவில் இருந்த பல சிந்தனையாளர்களைச் சுட்டிக்காட்டி வள்ளுவர் எப்படி அவர்களிடமிருந்து வேறுபடுகிறார் என்பதை நுட்பமாக எடுத்துக்காட்டுகிறது. இல்வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகள்,துறவியாக இருப்பவர்களுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகளைச் சுட்டிக்காட்டி அறத்தை வலியுறுத்துவதற்கு வள்ளுவர் கையாண்ட உத்தியை எடுத்துக்காட்டுகிறது.அறத்தின் அடிப்படையில் மனுதர்மம் போன்றவற்றிலிருந்து வள்ளுவம் எப்படி தனித்தன்மையானது என்பதை ஆராய்கிறது.*

**முன்னுரை:**

பல்வேறு நாகரிகங்களில், சிந்தனையாளர்கள் ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதன் பொருள் என்ன என்பதை விளக்க முயன்றுள்ளனர்.

- கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டாட்டில் (Aristotle 384–322 கி.மு), சுயக் கட்டுப்பாடு (self-control), நெஞ்சுரம் (courage) மற்றும் மிதவாதம் (moderation) போன்ற நல்ல பழக்கவழக்கங்கள் மூலம் நற்பண்பு வளர்க்கப்படுகிறது என்றும், இந்தக் குணங்கள் மனிதர்கள் சிறப்பாக வாழவும் செழிக்கவும் உதவுகின்றன என்றும் நம்பினார்.
- ஜெர்மானியத் தத்துவஞானி இம்மானுவேல் கான்ட் (Immanuvel Kant 1724-1804 கி.பி.), தனிப்பட்ட நன்மைக்காகவோ அல்லது தண்டனைக்கு அஞ்சியோ அல்லாமல், ஒரு செயல் சரியானது என்பதற்காகவே தனது கடமைகளைச் செய்வதில்தான் நற்பண்பு அடங்கியுள்ளது என்று வாதிட்டார்.
- ரோமானிய தத்துவஞானியான மார்க்கஸ் அரேலியஸ் (Marcus Aurelius 161-180 கி.பி.), நற்பண்பு என்பது உள் ஒழுக்கம் (inner discipline), ஒருவரின் ஆசைகளின் மீதான கட்டுப்பாடு, மற்றும் துன்பத்தின் போதும் பகுத்தறிவின்படி வாழ்வது ஆகியவற்றைக் குறிக்கிறது என்று கற்பித்தார்.
- சீனத் தத்துவஞானி கன்ஃபூசியஸ் (Confucius 551–479 கி.மு.) அன்றாட உறவுகளில் நற்பண்புக்கு முக்கியத்துவம் அளித்து, கருணை, மரியாதை மற்றும் முறையான நடத்தை ஆகியவை சமூக நல்லிணக்கத்திற்கு அவசியமானவை என்று கருதினார்.
- வைதிக மதத்தைச் சார்ந்த மநு என்பவர் மநுஸ்மிருதியில் கூறும் தர்மம் என்பது அனைவருக்கும் பொதுவானதன்று. அது

ஒவ்வொரு குலத்துக்கும் வெவ்வேறு தர்மத்தைப் போதிக்கிறது என்றார்.

திருக்குறளில் திருவள்ளுவர் கூறும் அறம் பற்றிய கருத்து, இந்தச் சிந்தனையாளர்களின் கருத்துகளுடன் சில ஒற்றுமைகளைக் கொண்டிருந்தாலும், முக்கியமான வழிகளில் அவர்களிடமிருந்து வேறுபடுகிறது. அரிஸ்டாட்டிலைப் போலவே, வள்ளுவரும் தன்னடக்கம் நல்லொழுக்கம் ஆகியவை தேவை என்று கருதுகிறார்; கன்ஃபூசியஸைப் போலவே, வள்ளுவர் அன்பு, நட்பு, அருள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்; மேலும் மார்க்கஸ் அரேலியஸைப் போலவே, வள்ளுவர் அக ஒழுக்கம், மன வலிமை ஆகியவற்றை வலியுறுத்துகிறார். இருப்பினும், கான்டின் கடுமையான விதி அடிப்படையிலான ஒழுக்கவியல் அல்லது மதக் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்ட நெறிமுறைகளைப் போலன்றி, வள்ளுவர் அறத்தை அன்றாட வாழ்வில் வேரூன்றிய நல்லொழுக்கமாகக் கருதுகிறார். வள்ளுவரின் அறத்தைப் பற்றிய கருத்து மநு என்பவர் மநுஸ்மிருதியில் கூறும் கருத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. வள்ளுவர் மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதுதான் அறம் என்று கூறுகிறார். வள்ளுவர் கூறும் அறம் உலக மக்கள் அனைவருக்கும் எக்காலத்துக்கும் ஏற்றது. இக்கட்டுரை, வள்ளுவர் கூறும் அறம் என்னும் ஒழுக்க நெறியைப் பற்றியும், மனிதர்களின் நல்வாழ்கைக்கு அது எப்படிப் பயனுடையதாக உள்ளது என்பதையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

### இல்வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகள்

இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில், இல்வாழ்க்கையில் இருப்பவன் தன் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகிய மூவர்க்கும் துணையாக இருக்க வேண்டும் என்றும், துறவிகள், வாழ்க்கையை அனுபவிக்க முடியாதவர்கள், வாழ்க்கைப் பாதையிலிருந்து தவறியவர்கள், இறந்த முன்னோர்கள், தெய்வம், விருந்தினர்கள், சுற்றத்தார் ஆகியோருக்கும் துணையாக இருக்க வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார். அது மட்டுமல்லாமல் தன்னையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இலவாழ்க்கையில் இருப்பவனின் கடமை என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

கற்பு நெறியிலிருந்து தவறினால் அது தன் கணவனுக்கும், தன் குடும்பத்துக்கும், தான் இழைக்கும் தீமை என்பதை உணர்ந்து, மனைவி கற்பிற் சிறந்தவளாக, கணவனுக்கும் குடும்பத்திற்கும் ஏற்றவளாகக் குடும்பத்துக்குப் பெருமை சேர்ப்பவளாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவதை வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் காண்கிறோம்.

தம் குழந்தைகளின் மழலைச் சொற்கள் குழலிசையையும் யாழிசையையும்விட இனிமையானது என்றும் அவர்களின் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனியது என்றும் உணர்ந்து, அவர்களை அன்போடு அரவணைத்து, நல்ல முறையில் வளர்த்து, அவர்களை அவையில் முந்தி இருக்கச் செய்வது தந்தையின் கடமை என்பதும், குழந்தைகள் அறிவோடும் ஆற்றலோடும் சிறந்திருப்பதைக் காண்பவர்கள் அவர்களைப் பெற்ற தந்தை அத்தகைய சிறப்பான குழந்தைகளைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று வியக்கத்தக்க வகையில் அந்தக் குழந்தைகள் இருப்பது அவர்களின் கடமை என்பதும் மக்கட்பேறு என்ற அதிகாரத்தில் நாம் காணும் கருத்துகள்.

விருந்தினர்களைப் பேணி, இனிய சொற்கள் பேசி, நடுவுநிலைமையிலிருந்து தவறாமல், அடக்கத்தோடும், ஒழுக்கத்தோடும், பிறனில்விழையாமல், அழுக்காறுகளை நீக்கி, பொறுமையோடு, புறங்கூறாமல், பயனில்லாத சொற்களைப் பேசாமல், தீய செயல்களைச் செய்வதற்கு அஞ்சி, மற்றவர்களும் தம்மைப் போன்றவர்கள் என்பதை மனதில்கொண்டு அவர்களுக்கு அவர்கள் வந்து கேட்காமலேயே உதவிகள் செய்து, இல்லையென்று இரப்போர்க்குக் கரவாமல் அவர்களிடமிடருந்து எதையும் எதிர்பார்க்காமல் உதவி செய்து, புகழோடு வாழ்வது இல்வாழ்க்கையில் இருப்பவர்களின் கடமை என்று வள்ளுவர் கூறுகிறார். மேலும், தொடர்பில்லாதவர்களிடமும் பிற

உயிரினங்களிடமும் பாசத்தோடும் பரிவோடும் இருந்து, புலால் உண்ணுவதைத் தவிர்த்து, பிறர் பொருளை விரும்பாமல், எவரிடமிருந்தும் எதையும் திருடாமல், திருட நினைக்காமல், வாய்மை பேசி, சினத்தைத் தவிர்த்து, எவருக்கும் எந்தத் தீமையும் செய்யாமல், எவ்வுயிரையும் கொல்லாமல் வாழ்வதும் இல்வாழ்க்கையில் இருப்பவனின் கடமை என்பதையும் திருக்குறளில் காண்கிறோம்.

**துறவியாக வாழ்பவர்களுக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகள்**

இல்வாழ்க்கை வாழ்பவர்களுக்குரிய கடமைகளில், குடும்ப வாழ்க்கைக்குத் தொடர்புள்ள ஒழுக்கங்களையும், ஈகை, ஒப்புரவு ஆகிய ஒழுக்கங்களையும் தவிர மற்ற அனைத்தும் துறவிகளுக்கும் உரிய ஒழுக்கங்கள்தாம். மேலும், துறவியாக வாழ்பவர்கள், தமக்கு உற்ற துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு, எவ்வுயிர்க்கும் இன்னல் விளைவிக்காமல், தவத்தை மேற்கொண்டு, தகாத ஒழுக்கத்தைத் தவிர்த்து, வாழ்க்கையும் பொருளும் நிலையில்லாதது என்பதை உணர்ந்து, மெய்ப்பொருளாகிய நிலையான பொருளை அறிந்து, பற்றுக்களை அறுத்து, பிறவாத நிலையை அடைந்து, இடையறாத இன்பம் அனுபவிப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு வாழ வேண்டும் என்பது வள்ளுவர் துறவிகளுக்குக் கூறும் ஒழுக்க நெறி.

**அல்லவை நீக்கி நல்லவை செய்தல்**

இல்வாழ்க்கையில் இருப்பவர்களுக்கும் துறவியாக வாழ்பவர்களுக்கும் வள்ளுவர் கூறும் ஒழுக்க நெறிகளை ஆராய்ந்தால் அவை அனைத்தும் தனக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களையும் சொற்களையும் தவிர்த்துத் தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் செயல்களைச் செய்வதும், சொற்களைப் பேசுவதும் வள்ளுவர் கூறும் ஒழுக்க நெறிகளின் மய்யப்பொருளாகத் தோன்றுகிறது. அவ்வாறு அல்லவை நீக்கி நல்லவை செய்ய வேண்டுமானால் மாசுகள் இல்லாமல் மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் வள்ளுவரின் அறிவுரை. மனதில் மாசுகள் இல்லாமல் தூய்மையாக வைத்துக்கொள்வதே அறம் என்றும், மற்றவை அனைத்தும் வெறும் ஆரவாரம் என்றும் அறத்துக்கு வரையறை அளிக்கிறார் வள்ளுவர். மனத்தில் மாசில்லாமல் இருப்பது அறம் என்று கூறும் வள்ளுவர், மாசுகள் எவை என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளையும் சுட்டிக் காட்டுகிறார். அழுக்காறு (பொறாமை), அவா (பேராசை), வெகுளி (சினம்), இன்னாச்சொல் ஆகிய நான்கும் மாசுகள் என்றும், மனத்தில் இவை நான்கும் இல்லாமல் இருப்பது அறம் என்றும் வள்ளுவர் விளக்கம் அளிக்கிறார்.

> **“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
> **ஆகுல நீர பிற.”** (**குறள்** 34)

> **“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
> **இழுக்காது இயன்றது அறம்.”** (**குறள்** 35)

மனிதன் செய்கிற செயல்களும் பேசுகிற சொற்களும் அவனுடைய மனநிலையின் பிரதிபலிப்பாகவே அமைகின்றன. மனத்தில் உருவாகும் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் ஆசைகள்தாம் அவனது நடத்தைக்கு அடித்தளமாக இருக்கின்றன. மனம் அமைதியாகவும் தெளிவாகவும் இருந்தால் செயல்களும் சொற்களும் நல்லவையாக அமையும்; மனம் குழப்பமடைந்தால் அதுவே தவறான செயல்களுக்கும் இன்னாச் சொற்களுக்கும் வழிவகுக்கும். ஆகவே, மனிதனின் வாழ்வை வழிநடத்துவது அவனுடைய மனமே ஆகும். ஒருவன் தன் மனத்திலிருந்து அழுக்காறு (பொறாமை), அவா (பேராசை), வெகுளி (சினம்), இன்னாச்சொல் முதலிய மாசுகளை நீக்கிவிட்டால், அவனால் தன் செயல்களாலும் சொற்களாலும் தீமை செய்ய முடியாது என்பது வள்ளுவரின் கருத்து. உதாரணமாக, ஒருவன் இன்னாச்சொல் பேசாதவனாக இருந்தால், பொய்பேசுதல், புறங்கூறுதல், பயனில சொல்லுதல், கடுஞ்சொற்கள் கூறுதல் ஆகியவற்றால் தான் பிறருக்கு விளைவிக்கும் தீமைகளைத் தவிர்ப்பான். சினத்தால் ஒருவனின் இரத்த

அழுத்தம் அதிகாமாகிறது. இரத்த அழுத்தம் அதிகமானால், இதயம், மூளை, சிறுநீரகம் முதலிய உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஒருவன் சினம் கொண்டால், அது அவனுக்குத் தீமை விளைவிப்பது மட்டுமல்லாமல், சினத்தால் அவன் செய்யும் செயல்களும் சொல்லும் சொற்களும் பிறருக்குத் துன்பம் தரும். ஆகவே, சினத்தைத் தவிர்த்தால், அதனால் தனக்கும் பிறருக்கும் நேரிடும் துன்பங்களைத் தவிர்க்கலாம். அழுக்காறு அவா போன்ற மாசுகளால், பிறர் பொருளைக் கவர வேண்டும் என்ற எண்ணமும், பிறர் பொருளைத் திருடவும் நேரிடும். ஆகவே, அழுக்காறைத் தவிர்த்தால், வெஃகுதல், களவு போன்ற செயல்களால் தனக்கும் பிறருக்கும் நேரிடும் துன்பங்களைத் தவிர்க்கலாம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய மாசுகளை மனத்திலிருந்து நீக்கி, மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டால், அவற்றால் தனக்கும் பிறருக்கும் ஏற்படும் தீமைகளைத் தவிர்க்கலாம்.

## மனத்தில் உள்ள மாசுகளை எப்படி நீக்குவது?

மனத்தில் உள்ள மாசுகளை நீக்குவதற்கு வள்ளுவர் ஓர் அறிவுரை கூறுகிறார். உடலை நீர் தூய்மைப் படுத்துவதுபோல் வாய்மை உள்ளத்தைத் தூய்மை செய்யும் என்பது வள்ளுவரின் அறிவுரை.

**“புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.”** (குறள் 298)

உள்ளதை உள்ளவாறு கூறுவது உண்மை. நாம் பேசும்பொழுது, நம்முடைய சொற்களால் மற்றவர்க்கு எந்தத் தீமையும் விளையாமல் இருக்குமேயானால் அது வாய்மை என்பது வள்ளுவர் வாய்மைக்குக் கூறும் இலக்கணம். உதாரணமாக, ஒருவனைக் கொலை செய்வதற்காக ஒரு கொலைகாரன் அவனைத் துரத்திக்கொண்டு வரும்பொழுது அவன் உங்கள் வீட்டில் தஞ்சம் அடைகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனைத் துரத்திக்கொண்டு வந்த கொலைகாரன் உங்களிடத்தில் வந்து, ”இங்கு ஒருவன் வந்து உங்கள் வீட்டில் ஒளிந்துகொண்டிருக்கிறானா?” என்று கேட்டால், நீங்கள், “அவன் இங்கு வரவில்லை.” என்று சொன்னால், உங்கள் சொற்களால் எவருக்கும் எந்தத் தீங்குமில்லை. ஆகவே, அது வாய்மை. நீங்கள், “ஆம். அவன் இங்குதான் இருக்கிறான்.” என்று கூறினால் அது உண்மை. நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு கூறுவது உண்மை. மற்றவருக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காத சொற்களைக் கூறுவது வாய்மை.

**“வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.”** (குறள் 291)

உடலைத் தூய்மையாக வைத்துக்கொள் வதற்கு நீர் பயன்படுகிறது. ஆனால், உடல் தூய்மையாக இருக்க வேண்டுமானால் நாள்தோறும் நீரைப் பயன்படுத்திக் குளிக்க வேண்டும். அதுபோல், மனம் தூய்மையாக இருக்கவேண்டுமானால் எப்பொழுதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் வாய்மை பேசவேண்டும். பயம், குற்ற உணர்ச்சி, தன்னையே ஏமாற்றிக்கொள்வது ஆகியவற்றிலிருந்து வாய்மை பேசும் பழக்கம் மனிதனை விடுவித்து, அவனுடைய மனத்திற்கு அமைதியும் தெளிவும் அளிக்கிறது. வாய்மை பேசுவது பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பதால் அது அகங்காரத்தைக் குறைத்து, ஒழுக்கத் தெளிவை வளர்க்கிறது. வாய்மை பேசுவது மனத்திலுள்ள முரண்பாடுகளை அகற்றி, எண்ணம், சொல், செயல் ஆகியவற்றிற்கு இடையே ஒற்றுமையை அளிப்பதால், வள்ளுவர் வாய்மை பேசுதல் மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது என்று கூறுகிறார்.

ஆகவே, மனிதன் எப்பொழுதும் வாய்மை பேசினால், அவன் மனதில் மாசுகள் இரா. மனதில் மாசுகள் இல்லையென்றால், மனிதன் தீய செயல்களைச் செய்ய மாட்டான்; தீய சொற்களைப் பேச மாட்டான். அதாவது செயலாலும் சொல்லாலும் எவருக்கும் தீங்கிழைக்க மாட்டான் என்பது வள்ளுவரின் கருத்தாகத் தோன்றுகிறது.

**மனதைத் தூய்மையாக வைத்துக் கொண்டால், பிறருக்கு நன்மை செய்ய முடியுமா?**

மனிதனின் உயிரும் உடலும் இணைந்து இயங்குகிறது என்றும் அன்பில்லாத மனிதன் தோலால் போர்த்தப்பட்ட எலும்பு மட்டுமே என்றும் அன்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**“அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு.”** (குறள் 73)

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.”** (குறள் 80)

உயிரோடு இருக்கும் எந்த மனிதனும் தோலால் போர்த்தப்பட்ட எலும்புக் கூடு மட்டுமல்ல; அன்பினால்தான் மனிதனின் உயிரும் உடலும் இயங்குகிறது என்று வள்ளுவர் கூறுவதிலிருந்து, உயிரோடு இருக்கும் ஒரு மனிதனிடத்தில் அன்பு என்ற பண்பு இயல்பாகவே இருக்கிறது என்பது புலனாகிறது. ஆனால், அவனால் சில காரணங்களால் அதை வெளிப்படுத்த முடியவில்லை என்பது பெறப்படுகிறது. இயல்பாக உள்ள அன்பு அவனுடைய, வளர்ப்புமுறை, சுற்றுச்சூழல், வாழ்க்கை அனுபவங்கள், மனதில் உள்ள சினம், அழுக்காறு, பேராசை போன்றவற்றால் தோன்றிய மாசுகளால் வெளிப்படுத்த முடியாமல் தடை செய்யப்படுகிறது. தூசு படிந்த கண்ணாடியால், அதன் முன் உள்ள பொருளைப் பிரதிபலிக்க முடியாததுபோல், ஒருவனின் மாசு படிந்த மனதால் அவனிடம் இயல்பாக உள்ள அன்பை அவனால் வெளிப்படுத்த முடியவில்லை. அந்த மாசுகள் நீங்கினால், அன்பை வெளிப்படுத்த முடியும்.

ஒருவன் தன் உறவினர், சுற்றத்தார் ஆகியோரிடம் காட்டும் பாசத்தை அன்பு என்றும், மற்றவர்களிடத்திலும் மற்ற உயிரினங்களிடதிலும் அவன் காட்டும் பாசம், கருணை ஆகியவற்றை அருள் என்றும் வள்ளுவர் வகுக்கிறார். மாசுகள் நீங்கி அன்பு வெளிப்பட்டால், ஒருவனுடைய இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். அதனால்தான் வள்ளுவர்,

**“அன்பும் அறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.”**

என்கிறார். ஆகவே, அன்போடும் அறத்தோடும் கூடிய இல்வாழ்க்கையில் இருப்பவன், தன் மனைவி, மக்கள், பெற்றோர் மற்றும் பிற உறவினர்கள், நெருங்கிய தொடர்பில் உள்ளவர்கள் ஆகியோரிடம் பரிவும் பாசமும் காட்டி அவர்களுக்கு எவ்விதத் தீமையும் செய்யாமல் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களைக் காப்பாற்றுவான்; விருந்தோம்பல் தனது கடமை என்பதை உணர்ந்து இல்வாழ்க்கையில் இருப்பவன் அகமும் முகமும் மலர்ந்து செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருப்பான். மேலும், அன்பு விரிந்து நட்பாக மலர்ந்து“யாவரும் கேளிர்” என்ற மனிதநேயமாக மலர்கிறது என்பதும் வள்ளுவரின் கருத்தாகத் தோன்றுகிறது.

**“அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பு என்னும் நாடாச் சிறப்பு.”** (குறள் 74)

வள்ளுவர் கூறுவதைப்போல், ஒருவனுடைய அன்பு நட்பாக வளர்ந்தால்,

**”உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.”**

என்ற குறளுக்கேற்ப அவன் தன் நண்பர்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்காமல், அவர்களிடம் இன்சொல் பேசி அவர் துன்பங்களைப் போக்கி, அவர்களுக்கு நன்மைகளைச் செய்வான் என்று எதிர் பார்க்கலாம்.

அன்பு நட்பாக மலர்வதற்கும் அடுத்த நிலையில் அது அருளாக மாறுகிறது. அருளாக மாறுகின்ற பொழுது, எல்லா உயிர்களிடத்திலும் பரிவும் பாசமும் காட்டி, எவ்வுயிர்க்கும் எந்தத் தீமையும் செய்யாமல் நன்மைகளைச் செய்யும் இயல்பு தோன்றுகிறது. உதாரணமாக, பாரி தேரை முல்லைக்கு கொழுகொம்பாக அளித்ததற்கும், பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததற்கும், அவர்கள் உள்ளத்தில் இருந்த அருள்தான் காரணம்.

**”பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.”**

என்று வள்ளுவர் கூறுவதும் அருள் உள்ளவன் செய்கின்ற செயலைத்தான்

குறிக்கிறது. பாரியின் செயலும், பேகனின் செயலும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலும் – பொருள் இருந்தால்தான் செய்ய முடியும் என்பது.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்" என்று தொடங்கும் பாடலில் வள்ளலார் "நீரின்றி வாடிய பயிர்களைக் கண்ட போதும், பசியால் மேனி மெலிந்து வீடு தோறும் சென்றிரந்தும் பசி நீங்காது வருந்தும் வறியரைப் பார்த்தும், நோயினால் துன்புறுவோரைக் கண்ணெதிர் தோன்றக் காணினும் மனம் மிக வருந்தி நொந்தேன்; ஒப்பற்ற மானமுடையராய் வறுமை எய்தினமையால் உள்ளம் உடைந்து மெலிந்தவர்களைக் கண்டு மெலிவுற்றேன்."என்று கூறுகிறார். அவரிடத்தில் பொருள் இல்லாததால் வறியவர்களையும், நோயுற்றவர்களையும், வறுமையில் இருப்பவர்களையும் கண்டு வருத்தம் அடைய முடிந்ததே தவிர, அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. ஆகவே, அருள் இருந்தால் மட்டும் போதாது. பல நேரங்களில், பிறருக்கு உதவி செய்வதற்குப் பொருளும் வேண்டும். இந்தக் கருத்தை வள்ளுவர் மிக அழகாக ஒரு குறளில் கூறுகிறார், "அருள் என்பது அன்பு பெற்ற குழந்தை. ஆனால், அந்தக் குழந்தை செழிப்பாக வளர்வதற்கு செல்வம் என்ற ஒரு வாளர்ப்புத் தாய் தேவை." என்று அந்தக் குறளுக்குப் பொருள். அந்தக் குறள்:

**"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு."** (குறள் – 757)

**அறத்தை வலியுறுத்துவதற்கு வள்ளுவர் கையாளும் உத்தி**

நாம் ஒரு கருத்தைப் பிறரிடம் கூறும்பொழுது, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அதற்கு நான்கு அணுகுமுறைகளைப் பின்பற்றலாம்.

1) அந்தக் கருத்தை அவர்களிடம் சமாதானமாகவும், விளக்கமாகவும் கூறலாம்.

2) அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி அவர்கள் நடப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்று கூறலாம்.

3) அந்தக் கருத்தைப் பின்பற்றுவதற்கும் பின்பற்றாமல் இருப்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை விவரமாகக் கூறலாம்.

4) அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் – அதைப் பின்பற்றாமல் – இருப்பதால் என்ன தீமைகள் வரலாம் என்று அவர்களிடம் கூறலாம். இந்த நான்கு அணுகுமுறைகளாலும் மற்றவர்களை நம் கருத்துக்கு இணங்கவைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த அணுகுமுறைகளுக்கு வடமொழியில் "சாம பேத தான தண்டம்" என்று பெயர். வள்ளுவர் அறத்தை வலியுறுத்துவதற்கு "சாம பேத தான தண்டம்" என்ற உத்தியைப் பல அதிகாரங்களில் கையாளுகிறார். உதாரணமாக, அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில், குறட்பாக்கள் 34 மற்றும் 35இல் வள்ளுவர் அறத்தைப் பற்றிக் கூறி, அதைப் பின்பற்றுவதால் வரும் நன்மைகளை 31ஆம் குறளில் கூறி நம்மை ஊக்குவித்து, அறத்தைப் பின்பற்றுவதற்கும் அறத்தைப் பின்பற்றாமல் இருப்பதற்கும் இடையே உள்ள வேற்றுமையை 39ஆம் குறளில் கூறி, இறுதியாக 32ஆம் குறளில் அறத்தைப் பின்பற்றாவிட்டால் வரும் தீமைகளை எடுத்துரைத்து, நம்மை அச்சுறுத்தி, அறத்தைப் பின்பற்றுவதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற."** (குறள் 34)

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்."** (குறள் 35)

**"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு."** (குறள் 31)

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல."** (குறள் 39)

---

[1] வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு."** (குறள் 32)

"சாம தான பேத தண்டம்" என்னும் உத்தியைப் பல அதிகாரங்களில், பல இடங்களில் வள்ளுவர் பயன்படுத்துகிறார். உதாரணமாக, அன்புடைமை என்ற அதிகாரத்தில், 77ஆம் குறளில்,

**"என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்."**

என்று கூறுகிறார். இங்கு அறத்தைத் தன்னிச்சையாக இயங்கும் ஆற்றலாக வள்ளுவர் உருவகிக்கிறார் என்றுதான் பொருள்கொள்ள வேண்டும். அறம் ஒரு நல்லொழுக்க நெறி. அது தன்னிச்சையாகச் செயல்படும் ஆற்றல் உடையது அன்று. சிலர் கூறுவதுபோல் அறம் ஒரு தெய்வமும் அன்று. இதுபோல் வள்ளுவர் அறத்தைத் தன்னிச்சையாகச் செயல்படும் ஆற்றல்போல் சித்திரிக்கும் இடங்களில், அறத்தை வலியுறுத்துவதற்குப் பயன்படுத்தும் உத்தி என்று பொருள்கொள்வதே சிறந்ததாகத் தோன்றுகிறது. அதுபோல் பல இடங்களில் வள்ளுவர் "அறம் செய்க" என்று கூறுகிறார். "அறம் செய்க" என்பதற்கு "அறத்தைப் பின்பற்றுக" என்று பொருள்கொள்வது பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

**முடிவுரை**

வள்ளுவர் பார்வையில் "மனத்தில் மாசில்லாமல் இருப்பதுதான் அறம். மனத்தில் மாசில்லாவிட்டால் மனிதன் தன்னிடத்தில் இயல்பாக உள்ள அன்பு என்னும் பண்பை வெளிப்படுத்த முடியும். அன்புள்ள ஒருவன் பாசத்தோடும் பரிவோடும் மனைவி, மக்கள், பெற்றோர், மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கும், அவனை நம்பி வந்தவர்களுக்கும் துணையாக இருந்து நன்மைகளைச் செய்வான். நாளடைவில், அவன் நாடாமலேயே அவனுக்குப் பலருடைய நட்புக் கிடைக்கும். அடுத்த நிலையில், அவனுடைய அன்பு அருளாக மலர்ந்து, எவ்வுயிர்க்கும் தீமை செய்யாமல், அனைத்துயிர்களுக்கும் தன்னால் இயன்ற நன்மைகளைச் செய்வான். இதுவே வள்ளுவர் கூறும் அறம். வள்ளுவரின் அறத்தைப் பற்றிய கருத்து எந்நாட்டவர்க்கும் எக்காலத்துக்கும் ஏற்புடையது.

**குறிப்புதவி நூல்:**


1. **திருக்குறள்**
2. **மநுதர்மம்**


---

**ஆசிரியர் குறிப்பு**

**முனைவர் இரா. பிரபாகரன்**

*தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் பிரபாகரன், கணிதத் துறையில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைத் தமிழ்நாட்டிலேயே முடித்தார். தனது வாழ்க்கையை ஒரு விரிவுரையாளராகத் தமிழ்நாட்டில் தொடங்கிய அவர், பின்னர் உயர்கல்விக்காக அமெரிக்கா சென்றார். அங்கு கணினி அறிவியலில் முதுகலை (M.S.) மற்றும் முனைவர் (Ph.D.) பட்டங்களையும், மேலாண்மையில் எம்.பி.ஏ. (MBA) பட்டத்தையும் பெற்றார். அவர் தனியார் துறையில் உயர்பதவிகளிலும், அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா (NASA) மற்றும் அமெரிக்க ராணுவத்திலும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.*

*தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட முனைவர் பிரபாகரன், தமிழ் சமூகத்தின் நலனுக்காகப் பெரும் பங்களிப்புகளைச் செய்துள்ளார். அவர் வாஷிங்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு அறக்கட்டளையின் (Tamil Nadu Foundation) செயலாளராகவும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FeTNA) துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். வாஷிங்டன் டி.சி. பகுதியில் 'தமிழ் இலக்கிய ஆய்வுக் குழுவை' தொடங்கி, அதன் மூலம் திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் குறித்த ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டார். அமெரிக்காவில் முதலாவது பன்னாட்டு திருக்குறள், புறநானூறு மற்றும் குறுந்தொகை மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தினார். திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் குறித்து*

அவர் எழுதிய விளக்கவுரைகள் வலைப்பதிவு கள் வழியாக உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான தமிழர்களைச் சென்றடைந்துள்ளன.

முனைவர் பிரபாகரன் திருக்குறள் குறித்து ஆங்கிலத்தில் இரண்டு நூல்களை எழுதி யுள்ளார்: The Ageless Wisdom (As Embodied in Thirukkural) மற்றும் Valluvar's Answers to Vital Questions. இவை தவிர, திருக்குறள் குறித்துத் தமிழில் ஒரு நூலையும் எழுதியுள்ளார். புறநானூறு, குறுந்தொகை மற்றும் பத்துப் பாட்டின் பத்து நூல்களுக்கும் விரிவான விளக்கவுரைகளை அவர் வெளியிட்டுள்ளார். ஒட்டுமொத்தமாக, திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் சார்ந்து 17 நூல்களை அவர் எழுதியுள்ளார். இந்தியா மற்றும் அமெரிக்காவில் இந்தத் தலைப்புகள் குறித்துப் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றி, தமிழ் பாரம்பரியத்தின் பெருமையை உலகளவில் கொண்டு சேர்த்துள்ளார்.

சமீபத்தில், திருக்குறள் குறித்த முதல் ஆவணப் படத்தை 30 நிமிட கால அளவில் அவர் தயாரித் துள்ளார். இது தற்போது யூடியூப் (YouTube) தளத்தில் கிடைக்கிறது. இந்த ஆவணப்படம் இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன், சீனம், ஸ்பானிஷ், ஜப்பானிய மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

“பிராமணரல்லாத சமுதாயத்தார் விழிப்புற்றுச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அவர்களது வருங்காலம் அவர்கள் கைகளில்தான் இருக்கிறது. அவர்கள் முன்னே உள்ள பணி மகத்தானது. முதலாவதாக, இதுவரை இல்லாத முறையில் மிக அதிக அளவில் தங்கள் சிறுவர் சிறுமிகளைப் படிக்க வைக்க வேண்டும். இப்போதுள்ள கல்வி வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள பிராமணரல்லாத சமுதாயத்தாரை ஊக்கப்படுத்தவும், கல்வி வசதியற்ற இடங்களில் அவ்வசதியை ஏற்படுத்தவும், புத்திக்கூர்மையுள்ள ஏழைச் சிறுவர் சிறுமியருக்குக் கல்வி கற்பிக்க நிதி உதவி காணவும் பொறுப்பு வாய்ந்த பிராமணரல்லாத பிரமுகர்கள் கண்காணிப்பில் மக்கள் தொகை நிரம்பிய ஒவ்வொரு இடத்திலும் சங்கங்கள் துவக்கப்பட்டு, அவை மிகத் திறமையாகப் பராமரிக்கப்பட வேண்டும். உண்மையில் பிராமணரல்லாதாருக்கென ஒரு தீவிர கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டியது வெகு காலமாகத் தேவைப்படுவதாகும். பிராமணரல்லாத வகுப்பினரைக் கல்வியில் முன்னேற்றுவதற்குச் சங்கங்கள் அமைப்பதோடு கூடவே சமுதாய, அரசியல் அமைப்புகளும் உருவாக்கப்பட வேண்டும்.”

**1917 – ‘பிராமணரல்லாதார் கொள்கை அறிக்கை’ திராவிட இயக்க வரலாறு தொகுதி–1, முரசொலி மாறன்**

# திருவள்ளுவர் இறை நம்பிக்கையாளரா? ஒரு பெரியாரிய வாசிப்பு



பேரா. **வெ. முருகன்**

**கட்டுரைச் சுருக்கம்:**

*இலக்கிய வாசிப்பு/திறனாய்வு நெறிமுறையானது நூலின் ஒருமைக் கட்டமைப்பு (unity of structure)க் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. திருக்குறள் வகையில் அதன் ஒருமைக் கட்டமைப்பின் ஊடிழைகளாக அமைவன நூலின் அறிவியல் அணுகுமுறையும் மனிதக் கோட்பாடும் (humanism) உட்பொதிவாக அமைந்துள்ள வேத மத மறுதலிப்பும். இம்மூன்றின் ஊடேயான வாசிப்பில் வெளிப்படுவது தொல்காப்பியர், தொல்தமிழ் அகப் புறச் சான்றோர் வழியில் திருவள்ளுவர் வேத இறை மறுப்பாளர் என்பதே. பெரியாரியப் பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதை, ஜாதி ஒழிப்பு முதலியன திருக்குறள் வாசிப்புவழி விளக்கம் பெறுகின்றன என்பதும் திருக்குறள் வாசிப்புக்குப் பெரியாரியப் புரிதல் துணை புரிகின்றது என்பதுமே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.*

*திறவுச்சொற்கள்: ஒருமைக் கட்டமைப்பு, அறிவியல் அணுகுமுறை, மனிதம், பெரியாரியம், உட்பொதிவு.*

**முன்னுரை:**

மேலை இலக்கியத் திறனாய்வில் நனிபேராளுமையாகத் திகழும் நார்த்ராப் ஃப்ரை கூறுகிறார்:

> The primary understanding of any work of literature has to be based on an assumption of its unity. However mistaken such an assumption may eventually prove to be, nothing can be done unless we start with it as a heuristic principle. Further, every effort should be directed towards understanding the whole of what we read, as though it were all on the same level of achievement.... Even if the best he can do for the time being is a far-fetched or obviously rationalized explanation, that is still his sanest and soundest procedure. (Aims and Methods of Scholarship, MLA, pp 63-64)

**இதன் பொருளாவது:** ஓர் இலக்கியப் பனுவலின் முதனிலைப் புரிதலுக்கு அடிப்படையானது அதன் ஒருமைத் தன்மை குறித்த கருதுகோளாகும். ஓர் ஏட்டை வாசிக்கும்போது அதனை முழுதூடாய்ப் புரிந்துகொள்வதற்கான அனைத்து முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்புரிதல் வழியான விளக்கம் அண்மைத் தன்மையிலிருந்து விலகியதாகவோ, காரண – காரிய – ஏரண முறையிலானதாகவோ இருப்பினும், இதுவே முற்றிலும் அறிவார்ந்த, விவேகமான அணுகுமுறையாகும்.

திருக்குறள் வாசிப்பு வகையில் ஃப்ரையின் இக்கருத்து மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த

ஒன்றாகும். ஏனெனில், தனித்தனிக் குறளையும் தனித்தனி அதிகாரத்தையும் வாசித்துவிட்டு அதனதன் அடிப்படையில் திருக்குறளைப் பல குரல் கலவையாக நோக்கும் போக்கு பலரது எழுத்திலும் பேச்சிலும் மிகுந்து காணப்படும் சூழல் அன்றும் இன்றும் நிலவக் காண்கிறோம். வள்ளுவர் ஓர் இறை நம்பிக்கையாளர் என்ற கருத்தாக்கமும் இத்தகையதோர் குறைபட்ட அணுகுமுறை சார்ந்ததே.

இனி, திருக்குறளின் முழுதூடான பொருண்மைக் கட்டமைப்பு எத்தகைய நோக்கினைக் கொண்டது என ஆராய்வோம். முதலில் 'நோக்கு' என்னும் செய்யுள் உறுப்புக்கு விளக்கம் தரப்போந்த இலக்கிய மொழியியல் முன்னோடி வல்லார் தொல்காப்பியர் கீழ்வருமாறு கூறுகிறார்:

**"மாத்திரை முதலா அடிநிலை காறும்**
**நோக்குதல் காரணம் நோக்கு எனப்படுமே."** (1356)

ஃப்ரையின் முழுதூடான பார்வை தொல்காப்பிய நோக்கோடு ஒத்தியலுதல் காண்க.

திருக்குறளின் ஒருமைக் கட்டமைப்பில் (unity of structure) நூல் முழுதும் ஊடிழையாக அமைந்திருப்பது தொல்காப்பியத்தில் பொதிந்துள்ளது போன்ற அறிவியல் பார்வையும் அறிவியல் மனப்பாங்குமாகும். இவை இரண்டையும் வள்ளுவரே விளக்குகிறார்.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு."** (423)

**"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு."** (355)

இவ்வறிவியல் நோக்கானது திருக்குறளில் நான்கு முறைகளில் தொழிற்படக் காணலாம். அவையாவன:

- பட்டறிவியம் (empiricism)
- தொகுமுறை (inductive method)
- பகுமுறை (deductive method)
- உலகப் பொதுமை (universality)

பட்டறிவியம் என்பது அனைத்து அறிவும் புலனுணர்வுசார் அனுபவத்தின் அல்லது நேர்க்காட்சியின் அடிப்படையிலானது என்னும் கருத்தியலாகும். திருக்குறளின் பெரும்பான்மைக் கருத்தாக்கங்கள் புலனுணர்வு அல்லது நேர்க்காட்சி அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருக்கக் காணலாம்.

எடுத்துக்காட்டுகள்:

**"அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை."** (37)

**"மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர்**
**சொல்கேட்டல் இன்பம் செவிக்கு."** (65)

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை."** (750)

**"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து."** (1102)

தொகுமுறையானது தனித்தனி நிகழ்வுகளை ஒருசேர நோக்கி அவற்றின் அடிப்படையில் பொது விதிகளைக் கட்டமைத்தலாகும். இதனைப் பொதுமைப்படுத்தம் (generalization) எனவும் வழங்கலாம். வள்ளுவர் மிகுதியாகப் பயன்படுத்தும் மற்றுமோர் அறிவியல் அணுகுமுறை இதுவாகும்.

எடுத்துக்காட்டுகள்:

**"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்."** (448)

இடித்துரைப்பார் இல்லாது கெடுபவர் மன்னனாகவும், இன்றைய ஆட்சியாளராகவும் ஓர் அமைப்பின் தலைவராகவும் இருக்கலாம். இன்னுமொரு குறள்:

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்."** (517)

இதனை என்னும் செயல் இலக்கும் (object) இதனால் என்னும் செயற்கருவியும் (instrument) இவன் என்னும் செயலாற்றுபவரும் (subject) எத்துறைக்கும் பொருந்துதல் காண்க.

மூன்றாவதாக, பகுமுறை என்பது ஒரு பொது விதியின் அடிப்படையில் தனி நிகழ்வுகளை விளக்கப்படுத்துதலாகும் (particularization).

**“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.”** (467)

என்பது, பல்வகைப்பட்ட செயல்களுக்குப் பொருத்திப் பார்க்கவல்ல பொது விதியாக அமைவது. இவ்வாறான குறள்கள் மிகப் பலவாக உள்ளமையைக் காணலாம்.

நான்காவதாக, உலகப் பொதுமை பேசும் குறள்கள் பல்வேறான கால, இடச் சூழல்களுக்கும் மொழி, இனம்சார் மாந்தர்களுக்கும் பொருந்தி அமைவன. இக்குறள்கள் முதுமொழிகளைப் பட்டியலிடுவன அன்று. வள்ளுவர் தன் நுண்மாண் நுழைபுலத்தால் பொருள்களின் ஆழத்திற்குச் சென்று அவற்றின் மாறா அடிப்படைகளைக் கண்டறிந்து கூறுதலாகும். கீழ்க்காணும் குறள்களை நோக்குக –

**“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.”** (466)

**“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.”** (471)

**“காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**
**பேதமை எல்லாம் தரும்.”** (507)

இவ்வாறாக, பெரும நிலையில் அறிவியல் அடிப்படையில் அமைந்த மற்றும் பகுத்தறிவில் தோய்ந்த பாக்களாலான அறிவிலக்கியம் திருக்குறள் ஆகும். மேலும் திருக்குறளின் காமத்துப்பால் தொல்காப்பியர் வகுத்தமைத்த இறைமைசாரா அக இலக்கியத்தை அடியொற்றியது. “செம்புலப் பெயல்நீர்போல் அன்புடை நெஞ்சம் தாம் கலக்கும்” இயற்கைப் புணர்ச்சி வகைப்பட்டது. ‘இடைச்சுர மருங்கின்‘ நிகழும் தலைவன் தலைவி உடன்போக்குக் கருத்தியல் இதனை உறுதிப்படுத்தும்.

எனவே, திருவள்ளுவரைக் கடவுள் நம்பிக்கையாளராகக் கட்டமைப்பது திருக்குறளைத் திறனாய்வுக் கோட்பாட்டுக்கு எதிரான தவறான வாசிப்புக்கு உட்படுத்து வதாகும். கடவுள் வாழ்த்து அதிகாரமும், ’வானுறையும் தெய்வம்’, ’இந்திரன்’ முதலான சொல்லாட்சிகளும் எத்தகையன எனின், அவை பிரெஞ்சுத் திறனாய்வாளர் டெய்ன் கூறும் ”தன்காலக் கருத்தியல் சூழலையும் மக்கள் இனத்தையும் தன் விளைபொருளாகப் பதிவுசெய்வது ஓர் இலக்கியத்தின் பண்பாகும்” (Literature is the product of the moment, race and milieu) என்னும் கருத்தின்பால் பட்டது என்க; நூலின் பொதுப்பண்பு (tone) அல்லது இழையமைப்பு (texture) சார்ந்தவை அன்று.

திருக்குறளின் அல்-இறைமைப் பொருண்மைக் கட்டமைப்புக்கு இதன் உட்பொதிவாக (subtext) அமைந்துள்ள வேத மத மறுப்புக் கோட்பாட்டையும் ஈண்டு நாம் சுட்டலாம் .

- **‘உழுவார் உலகத்தார்க்கு ஆணி’** என்றும், ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ என்றும் (அதிகாரம் 104) வேளாண் தொழிலை வள்ளுவர் உயர்த்திப் – பிடிப்பது உழவுத்தொழில் கீழ்ப்பால் மக்கள் தொழில் என ஆரியச் சாத்திரங்கள் வகுத்தமைத்தற்கான மறுப்புரையே ஆகும்.
- வள்ளுவரின் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் முழக்கம் (972) பகவத் கீதையின் படிநிலை வருணாசிரமக் கட்டமைப்பைத் தகர்க்கும் முன்னெடுப்பே என்க.
- பிராமணர்கள் ‘தானம்’ என்ற பெயரில் பிற வருணத்தாரர்முன் கையேந்தி பொருள் பெறுவதை அன்னார் ’தருமம்’ என ஸ்மிருதிகள் விதி செய்ய, திருவள்ளுவர் ’நல்லாறு எனினும் கொளல் தீது’ (222) என நெறி வகுப்பதை நோக்குக.
- ஆரியச் சாத்திரங்கள் கல்வியைப் பூசாரிய மற்றும் சத்திரிய வகுப்பினரின் தனி உரிமையாக்க, எண்ணும் எழுத்தும் அனைத்து உயிர்க்கும் கண் என்கிறார் வள்ளுவர் (392, 393, 400).
- தன் தொல்தமிழ் முன்னோரைத் தழுவி காமத்துப்பாலில் வள்ளுவர் பேசும் ஆண்-பெண் காதல் உறவு வைதிக ஜாதியப் பிணியின் நச்சுமுறி என்க.
- உற்றார் பசி துடைக்க அறம் பிறழ்வது தவறாகாது என ஆரிய தரும சாத்திரங்கள் அறிவுறுத்த,

**'ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை'** (656)

என்பது வள்ளுவர் ஆணை.

- பழவினைப் பயன் இன்றைய இருப்பை முடிவுசெய்யும் என வேத மதம் கூற, அறத்தாறு அன்று அது (37) என வள்ளுவர் மறுத்துரைக்கிறார்.
- ஆரியப் பெரும்பெயர் நூல்கள் சூதினை மய்யப்படுத்த, 'வேண்டற்க வென்றிடினும் சூதினை' (931) என அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

இன்னும் பல குறள்களிலும் வேத மதத்தைத் தோலுரிக்கும் வள்ளுவர், பல நிலைகளிலும் அறிவியலைத் தன் கருத்துகளின் ஊடிழையாகப் பிணைக்கும் வள்ளுவர் இம்மதத்தின் ஸனாதன உற்பத்திப் பண்டமான கடவுளை நம்புபவர் என்பது பிழைபட்ட வாசிப்பு என்பதில் அய்யமில்லை.

மேற்கூறிய அனைத்தாலும் தந்தை பெரியார் திருவள்ளுவர்மீது ஈர்ப்புக்கு உள்ளானார் என்பதுடன், மேலும் ஓர் அடிப்படைக் காரணத்தை இங்குச் சுட்டுதல் நலம். அஃதாவது, வள்ளுவரின் 'மனிதம்' என்கிற கோட்பாடு.

மனிதத்தை Concise Oxford English Dictionary பின்வருமாறு வரையறைப்படுத்துகிறது:

> A rationalistic outlook or system of thought attaching prime importance to human rather than divine or supernatural matters. (p. 693)

Webster's Collegiate Dictionary கூறும் இலக்கணமாவது:

> A philosophy that usu. rejects supernaturalism and stresses an individual's dignity and worth and capacity for self-realization through reason. (p. 605)

Oxford Tamil-Tamil-English Dictionary கூறும் விளக்கமாவது:

> தெய்வீக அல்லது மீயியற்கைச் செய்திகளுக்கு அன்றி மானுடம் சார்ந்த செய்திகளுக்கு முதன்மை முக்கியத்துவம் அளிக்கும் பகுத்தறிவுக் கோட்பாடு (827)

பெரியாரியத்தின் பிழிவாக அமையும் மனிதமாவதுகடவுள்மறுப்பையும்,பகுத்தறிவையும் சுயமரியாதையையும்நிகரறத்தையும்(=சமத்துவம்) சமூக நீதியையும் ஜாதி ஒழிப்பையும் உள்ளடக்கியுள்ளதையும் இக்கூறுகள் வள்ளுவத்தின் மய்யப் பரிமாணங்களாக அமைவதையும்,இவற்றின்வழி,தமிழ்க்கருத்தியல் வரலாற்றில்வள்ளுவரும்பெரியாரும்உயிர்த்துடிப்பு மிக்க இணைப்புறுப்புகளாக அமைந்திருக்கும் பாங்கையும் இக்கட்டுரை தெளிவுபடுத்தக் காணலாம். இக்கருத்தாக்கத்தின் ஒரு துணை விளைவு – தமிழ்க் கருத்தியல் வரலாற்றில் இறைமைக் கோட்பாட்டை உள்ளிணைப்பது ஒரு செயற்கையான, பிழைப்புவாத வெற்றுக் கற்பனையே என்பதாகும்.

எவ்வாறெனின், தொல்காப்பியர் தொடங்கி வள்ளலார் ஊடாகத் தந்தை பெரியார் வரையிலான தமிழ்க் கருத்தியல் வரலாற்றில் இறைமைசாரா அறிவியலே முந்துருத்தி நிற்கக் காணலாம். ஆரிய, எகிப்திய, சுமேரிய, கிரேக்க, யூத, கிறித்துவக் கருத்தியல்கள் உலகத் தோற்றத்தைப் புலன்களால் அறிய இயலாத இறைவன் படைப்பாகக் கட்டமைக்க, தொல்காப்பியம் கூறும் அறிவியல் விளக்கத்தையும் அதிலுள்ள 'கலந்த', 'மயக்கம்' என்னும் இணைப்பொருள் சொற்களின் நுட்பமான பொருள் வேறுபாட்டையும் நோக்குக.

**"நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்..."** (1581)

இவ்வறிவியல் வரையறையை யாப்பார்ந்த கவிதையாக்குகிறது ஒரு புறநானூறுப் பாடல்.

**"மண் திணித்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும பூதத்து இயற்கை..."**(2)

அறிவியல் படிமலர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையும் தொல்தமிழின் கருத்தியலி லிருந்தே தொடங்குகிறது.

**“ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.”**

**(தொல்காப்பியம்** 1518)

இப்படி படிமலர்ச்சியை (பரிணாம வளர்ச்சியை) ஒரு முதிர்ந்த அறிவியலாளர் போலத் தொல்காப்பியர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவதையும் காண்க.

**“புல்லும் மரனும் ஓர் அறிவினவே.** (1519)
**நந்தும் முரளும் ஈர் அறிவினவே.** (1520)
**சிதலும் எறும்பும் மூ அறிவினவே.** (1521)
**நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே.** (1522)
**மாவும் மாக்களும் ஐ அறிவினவே.** (1523)
**மக்கள் தாமே ஆறு அறியுயிரே.”** (1524)

டார்வின், ஸ்பென்சர் முதலான மேலை உயிரியலாரின் இலக்கிய முன்னோடியாகத் தொல்காப்பியரைக் காண்பது புல்லறிவாண்மை அன்று.

மேலும் அன்றிலிருந்து இன்றுவரை பிற மேலை, கீழை மெய்யியல், இலக்கிய நூல்கள் அறிவியலுக்கு முரணான மோட்சத்தையும் சுவர்க்கத்தையும் கட்டமைக்க, தமிழ்க் கருத்தியல் கூறும் உறுதிப்பொருள்கள் அறம், பொருள், இன்பம் என மூன்றையே தொல்காப்பியர் புகல்வதைக் காண்க.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு...** (1035)
**அறம் முதலாகிய**
**மும்முதல் பொருட்கும்...”** (1358)

இதுவே வள்ளுவர் ஏட்டின் முதன்மைப் பாற்பகுப்பாக அமைகிறது.

முத்தாய்ப்பாக, தமிழர் வழிபாட்டு மரபும் தகைசால் முன்னோரைப் போற்றும் நடுகல் வழிபாடே! இறை வழிபாடு அன்று என தொல்காப்பியர் கூறுவார்.

**“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று**
**இருமூன்று மரபின் கல்லொடு புணர...”** (1009)

சங்க இலக்கியப் பனுவல்கள் இதனை அய்யம்திரிபற வலியுறுத்திக் கூறுவதைக் காண்க.

**“கல்லே பரவல் அல்லது**
**நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே.”**

**(புறநானூறு** 335)

எனவே, பக்தி இலக்கியங்கள் என்பன தமிழ்ப் பண்பாட்டின்மீது வலிந்து திணிக்கப்பட்ட, பகுத்தறிவைப் புறந்தள்ளிய ஆரிய-பார்ப்பனக் கருத்தியல்களாகும்.

- **“அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று.” (குறள்** 259)
- **மழித்தலும் நீட்டலும் வேண்டா...(குறள்** 280)
- **...பரந்துகெடுக உலகியற்றியான். (குறள்** 1062)

முதலான குறள்களை இயற்றிய வள்ளுவர் தொல்காப்பிய, அகப்புறக் கருத்தியல்களின் உயிர்ப்பார்ந்த வழித்தோன்றல் என்பதையும் இந்நீள் மரபின் இருபதாம் நூற்றாண்டின் இணைப்புத் தொடரியே தந்தை பெரியார் என்பதையும் வெள்ளிடை மலை எனக் காண்டல் அறிவின்பாற்பட்ட செயலாகும்.

எனவே, ‘உன் கடவுளைவிட உன் சாத்திரங்களைவிட உன் அறிவு பெரியது’ என்னும் பெரியாரும் ‘எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்‘ என்னும் வள்ளுவரும் ஒருங்குவைத்து வாசிக்கப்படவும் புரிந்துகொள்ளப்படவும் வேண்டியவர்கள். இறை மறுப்பாளர் எனவும், ஸனாதனப் படிநிலைச் சமூகக் கட்டமைப்பைத் தகர்க்க வந்த, கலகக்காரர் எனவும் சுருக்கிப் பெரியாரை வாசிப்பதும் தொல்காப்பியரையும் சங்கச் சான்றோரையும் வள்ளுவரையும், ஜாதிய, சடங்குவழிப்பட்ட வேத மதக் கருத்தியல் களுக்கு அணுக்கமாகக் கொண்டுசெல்ல முனைவதும் இலக்கியத் திரிபு வாசிப்பேயாகும்.

மேலும் முக்கியமாக, தந்தை பெரியார் ஒரு சமூகப் புரட்சியாளராக அல்லது தனியொரு மனிதராகக் காட்டப்படுதல் அவரைத் தமிழ்க் கருத்தியல் முதன்மை நீரோட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி, படிப்படியாகத்

தனிமைப்படுத்தும் முயற்சியாகும். பெரியார் என்பவர் தமிழ்க் கருத்தியலோடு பின்னிப் பிணைந்த ஓர் உறுப்பானவர். குறிப்பாகத் திருவள்ளுவருடனான அவர் உறவு இருவழி (mutual) உறவாகும். வள்ளுவப் புரிதலுக்குப் பெரியாரும் பெரியாரியப் புரிதலுக்கு வள்ளுவரும் இன்றியமையாது வேண்டப்படுபவர்கள்; கொண்டு கொடுப்பு முறையில் வளமும் வன்மையும் சேர்ப்பவர்கள். எனவே, இவ்விரு தமிழ்ப் பண்பாட்டுப் பேராளுமைகளும் ஆழமான ஒப்பாய்வுக்கு உட்படுத்தவேண்டியவர்கள் ஆகின்றனர். சாக்ரடீசின் கிரேக்கம் உட்பட்ட எந்தவொரு பண்பாட்டிலும் இத்தன்மைத்தான மனிதத்தோடு பிணைப்புற்ற பகுத்தறிவாளர்கள் அரிதாகவே காணப்படுதல் கண்கூடு. இவர்கள் இருவரும் தமிழ் இந்தியா உலகிற்கு வழங்கிய ஒப்பிலா மனிதப் பகுத்தறிவுக் கொடைகள் (humanistic rationalists) என்பது வெற்றுரை அன்று.

இன்னுமொரு சொல். தென் தமிழ்நாட்டின் சிவகளை, திருமலாபுரம் தொல்லியல் எச்சங்கள் சான்றுரைக்கும் இரும்பு உருக்கும் அறிவியல் நுட்பத்தை 5500 ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்த திராவிடத் தமிழர் மரபில் இருபதாம் நூற்றாண்டில் உதித்த ஓர் உயரிய எடுத்துக்காட்டே தந்தை பெரியார் என்க. அனைத்துத் தமிழர்களும் என்னோற்றான் இவர் எனப் பெருமை கொள்ளத்தக்க மாமனிதரே பெரியார்! அவரை வள்ளுவரோடு இணைத்தே நோக்குவதும் கற்பதும் ஆய்வதும் அறிவுடைமையாகும்.

**குறிப்புதவி நூல்கள் :**


1. **தொல்காப்பியம்**
2. **திருக்குறள்**
3. Concise Oxford English Dictionary
4. Webster's Collegiate Dictionary
5. Oxford Tamil-Tamil-English Dictionary


---

**கட்டுரையாளர் குறிப்பு :**


*முன்னாள் ஆங்கிலப் பேராசிரியரான இவர் பயன்முறை மொழியியலில் முதுமுனைவர் பட்டமும் ஒப்பிலக்கியத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். ஆக்ஸ்போர்டு தமிழ்-தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதிகளின் ஆசிரியர். Tolkāppiyam in English, Naṟṟiṇai in English, Kalittokai in English, Paripāṭal in English, Tirukkuṟaḷ in English, Applied Linguistic Readings of Tolkāppiyam முதலான நூல்களின் ஆசிரியர். இவரது Tolkāppiyam: the Linguistics Threshold (தொல்காப்பியம்: மொழியியலின் தலைவாயில்) என்னும் நூல் அச்சில் உள்ளது.*

## On the Origin of the Inequality:

"Ambitious priests profited by these circumstances to perpetuate their offices in their own families: at the same time the people, already used to dependence, ease, and the conveniences of life, and already incapable of breaking its fetters, agreed to an increase of its slavery, in order to secure its tranquility.

Thus, having become hereditary, contracted the habit of considering their offices as a family estate, and themselves as proprietors of the communities of which they were at first only the officers, of regarding their fellow-citizens as their slaves, and numbering them, like cattle, among their belongings, and of calling themselves the equals of the Gods and Kings of Kings".

**(A Dissertation On the Origin and Foundation of The Inequality of Mankind and is it Authorised by Natural Law? - Jean Jacques Rousseau, 1754).**

# ROUSSEAU

**Distinguished Genevan/French Philosopher, Composer & Writer.**

# பேரறிஞர் அண்ணாவின் பேராளுமை!

**ஆ. செல்லப்பாண்டியன்**



**ஆய்வுச் சுருக்கம்:**

*பேரறிஞர் அண்ணா அவர்களின் பல்வேறு ஆளுமைப் பண்புகளை, அதன் விழுமியங்களை விளக்கிட இக்கட்டுரை முயற்சி செய்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை, இந்தியாவை எப்படிப் பார்த்தார் அண்ணா என்பதை எடுத்துக்காட்டுகிறது. அண்ணா முன்னெடுத்த போராட்டங்களையும், தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியதையும் சுட்டுகிறது. அரசியல் தளத்தைப் போல கலாச்சாரத் தளத்தை அண்ணா எப்படிப் பயன்படுத்தினார் என்பதையும், அவர் ஏற்படுத்திய பண்பாட்டு மாற்றங்களையும், அரசு நிர்வாகத்தில் எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கொண்டிருந்தார் என்பதையும், அவரது ஆட்சி எப்படி இன்றுவரை தமிழ்நாட்டில் தொடர்கிறது என்பதையும் ஆய்வு நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.*

**முன்னுரை:**

ஒரு நூற்றாண்டைக் கடந்து ‘திராவிட இயக்கம் தனது லட்சிய நோக்கங்களின் திசையில் உறுதியாகவும் வலிமையாகவும் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கிறது. சமுதாய மாற்றத்திற்கான, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் முழக்கங்கள் ஒவ்வொன்றாய்ச் செயல்வடிவம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஸநாதன ஆரியக் கூட்டத்தின் அனைத்து இடையூறுகளையும் தடைகளையும் தாண்டி ‘பெரியார் உலகம்” எனும் இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம். தந்தை பெரியார் உலகமயமாகிக் கொண்டிருக்கின்றார்; உலகம் பெரியார் மயமாகிக் கொண்டிருக்கிறது.

பகுத்தறிவுப் பேராசான் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கப் பெரும் படையின் தலைமைத் தளபதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பல்வேறு ஆளுமைப் பண்புகளையும் அதன் விழுமியங்களையும் இக்கட்டுரை விளக்கிட முயற்சித்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அரசியல் தளத்தின் ஒரு சகாப்தம். அவரது ஆளுமை என்பது ஆச்சரியங்களின் தொகுப்பு. அவற்றின் ஒரு சிறு பகுதிதான் இங்கு உங்கள் முன் படைக்கப்பட்டிருக்கிறது.

**இந்திய அரசியலமைப்பின் மறுவரைவாளர் அண்ணா**

இந்திய தேசிய அரசியலில் அண்ணா முன்வைத்த அடிப்படை தேசிய இன முழக்கம் ‘திராவிட நாடு கோரிக்கை”, அதனைத் தொடர்ந்து வலியுறுத்திய மாநில சுயாட்சிக் கொள்கை ஆகியவை பற்றி மூத்த பத்திரிகையாளர், மொழியுரிமைச் செயற்பாட்டாளர் திரு.ஆழி செந்தில்நாதன் எழுதியுள்ள கட்டுரையில் அண்ணாவின் லட்சியப் பயணத்தில் இதுபற்றி விரிவாக விவரிக்கிறார்.

சாம்ராஜ்யங்களின் கல்லறை என்று வர்ணிக்கப்படும் புதுடில்லியில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஸ்தமித்த 1947இல் நடந்த ஆட்சி மாற்றக் காட்சிகளை உன்னிப்பாகக் கவனித்தவர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவர் அண்ணா. திராவிட இயக்கப் பார்வையில் இந்திய சுதந்திரம் என்பது ஆங்கிலேயர்களிட மிருந்த ஆட்சி இந்தியாவில் உள்ள பிராமணர் உள்ளிட்ட முற்பட்ட ஜாதியினரின் கைகளுக்கு மாறிய ஒரு நிகழ்வு தானே ஒழிய, அது ஜனநாயகத்தின் வருகை அல்ல. பிராமணிய நாயகத்தின் வெற்றி என்று வர்ணித்த பெரியார், ஆகஸ்ட் 15, 1947ஆம் நாளை துக்க நாள் என்றும் அழைத்தார். அண்ணா தன் சமகால உலக அரசியல் போக்குகளோடும், தான் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுக் கட்டத்தோடும் அந்த நிகழ்வைப் பொருத்தினார். அந்தத் தளத்தில் பெரியாரிடமிருந்து அவர் வேறுபட்டார். இந்தியாவில் உருவாகும் புதிய அரசு பெரியார் சொன்ன 'பிராமணநாயகமாக' மட்டுமல்ல, ஒரு பனியா ஏகாதிபத்தியமாகவும் இருக்கிறது என்று 1946லேயே 'பணத்தோட்டம்" என்கிற தன் புகழ்பெற்ற நூலில் அண்ணா வர்ணித்திருந்தாலும், புதிய அரசை அவர் முற்றிலும் நிராகரிக்கவில்லை. இரண்டு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்தான் (ஆங்கிலேயர்கள்), மற்றுமொரு எதிரி இருக்கிறான் (வடவர்கள்) என்று கூறிய அண்ணா, மீதிச் சுதந்திரத்துக்கான போராட்டம் தொடர்கிறது என்று கருதினார். எனவேதான், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாளை அவர் இன்ப நாளாகவும் கருதினார். உலகம் கூர்ந்து கவனிக்கும் ஒரு மகத்தான நிகழ்வாக அந்த நாளை அண்ணா பார்த்தார்.

### இந்தியாவை எப்படிப் பார்த்தார் அண்ணா?

புதிய இந்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பிருந்தே அதன் குணாம்சங்களை வர்ணிக்கத் தொடங்கிய அண்ணா, (அன்றைய உலகச் சூழ்நிலையில்) இந்தியாவின் சுதந்திரம் என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வு" என்பதை அறிந்து, திராவிட இயக்கத்தின் மூலாதாரக் கோட்பாடுகளான திராவிடநாடு உள்ளிட்ட கோரிக்கைகளை அதற்கேற்றபடி புதுப்பிக்கத் தொடங்கினார் அண்ணா. பிற்காலத்தில் அவரது வெற்றிக்கும் தோல்விக்கும், தோல்வியிலிருந்து பெற்ற பாடத்துக்கும் காரணமாக இருந்த பல பார்வைகள் இந்தப் புள்ளியிலேயே அண்ணாவிடம் கருக்கொண்டன.

1947 ஆகஸ்ட் 15அய் மறுவியாக்கியானம் செய்யத் தொடங்கியது முதல் வாழ்வின் இறுதிநாள் வரை, அவர் தொடர்ச்சியாக எதிர்கொண்ட ஒரு போராட்டக்களம் உண்டென்றால், அதை இந்தியா என்னும் அரசோடும், இந்தியா என்னும் எண்ணத்தோடும், இந்தியாவின் அரசமைப்போடும் அவர் மேற்கொண்ட அரசியல் சித்தாந்தப் போராட்டமே ஆகும்.

பெரியாரைப் போலவே அண்ணாவும் இந்தியாவை ஒரு தேசமாகப் பார்க்கவில்லை. அவர் முன்மொழிந்த திராவிடநாடுகூட அவரைப் பொறுத்தவரை ஒற்றைத் தேசமல்ல. தமக்குள் பொதுத் தன்மைகள் கொண்ட தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்களின் தேசங்களின் கூட்டமைப்பே திராவிடநாடு என்பதே அவரது கருத்து. ஒரு மத்திய அரசுகூடத் தேவைப்படாத கூட்டமைப்பு அது என்று சொல்லலாம்!

### அண்ணாவின் தேசியப் பார்வை

1947க்கு முன்பு, இந்தியாவை நெகிழ்வான கூட்டமைப்பாகக் கண்ட காபினட் மிஷன் யோசனைகள் முன்வைக்கப்பட்ட போது, இந்தியாவை ஒரு பாதுகாப்புக் கழகமாக – வட்டார அய்.நா.சபை அல்லது நேட்டோபோல – அண்ணா கற்பிதம் செய்து பார்த்திருக்கிறார். தமிழ்நாடு என்பது தேசம், திராவிட நாடு என்பது ஒரு கூட்டரசு, இந்தியா என்பது ஒரு பாதுகாப்புக் கழகம். இதுவே அவரது தேசியம் குறித்த பார்வை என்று சொல்லலாம்.

1950களில் அண்ணா மிகத் தீவரமாக திராவிடநாடு கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால், 1956இல் மொழிவாரி மாநிலங்களின் பிரிவினை, தேர்தல் பங்கேற்பு, நேரு காமராஜர் ஆட்சிக் காலத்தின் சமூக மாற்றங்களை உற்றுணர்ந்தமை ஆகியவற்றுக்குப் பிறகு,

தனது விடுதலை நிறைவேறுவதற்கு வழியற்ற கனவாக மாறிக்கொண்டிருந்ததை அண்ணா உணரவும் செய்தார். இந்தக் காலகட்டத்தில், தன்னளவில் விடுதலைக் கோரிக்கையை கைவிடாத நிலையிலேயே, அண்ணா மாநிலங்களவைக்குச் சென்றார். இந்தியத்தையும் அதன் அறைகூவலையும் டில்லியிலேயே எதிர்கொண்டார்.

1962 ஏப்ரலில், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது, அண்ணா தன்னுடைய முதல் உரையை ஆற்றினார். அந்தக் கன்னிப் பேச்சிலேயே இந்தியா என்கிற கட்டமைப்பைப் பற்றிய தனது மிக முக்கியமான கேள்விகளை முன்வைத்து விடுகிறார் அண்ணா. இந்தியாவிலுள்ள புனிதப் பசுக்களிலேயே ஆகப்பெரிய புனிதப் பசுவான தேசிய ஒருமைப்பாடு என்கிற கருத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை. 'அய்யா, நான் கூறுவது தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ளப்படுமோ என்கிற சிக்கல் இருந்தாலும், தேசிய ஒருமைப்பாடு என்ற சொல்லே தன்னளவில் முரண்பாடு கொண்ட ஒன்று என நான் சுட்டிக்காட்டலாமா? மக்கள் ஒருமைப்படுகிறபோதுதான் தேசம் என்ற ஒன்றே உருவாகிறது. அவர்கள் தேசமாக ஒருமைப்பட்டுவிட்ட பிறகு, தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்த என்ன அவசியம் எழுகிறது? எனவே, நம்மைத் தடுத்து நிறுத்தி வைத்திருக்கும் எண்ணங்களின் வறுமையைத்தான் இந்தத் தேசிய ஒருமைப்பாடு என்கிற சொல் காட்டுகிறது" என அண்ணா கூறினார். அந்த அவையில் அந்தச் சொற்களை எவ்வாறு இந்தியா எதிர்கொண்டிருக்கும் என ஊகிப்பது கடினமல்ல. செவிட்டுக் காதுகளில் தொடர்ந்து ஊதினார் அண்ணா. 'எனவே, நான் விரும்புவதெல்லாம் இதுதான். மாற்றி யோசிப்போம். நம்மிடம் ஓர் அரசமைப்பு இருக்கிறதே இந்த நாட்டின் ஜாம்பவான்கள் உட்கார்ந்து அதை வடிவமைத்திருக்கிறார்கள். ஆனால், தேசம் என்ற ஒரு சொல்லை மறுசிந்தனை, மறுசீர்தூக்கல், மறுமதிப்பீடு, மறுவியாக்கியானம் செய்வதற்கான காலம் வந்துவிட்டது" என முழங்கினார்.

**பிரிவினை என்பது எதிரித் தன்மை அல்ல!**

'எங்களுக்கென்று சில தனித் தன்மைகள் உள்ளன. இந்த நாட்டுக்கு அல்லது இந்த உலகத்துக்கு அளிப்பதற்கென சில சிறப்பம்சங்கள் உள்ளன. அதற்காகவே சுயநிர்ணய உரிமையை நாங்கள் கேட்கிறோம்" என்று அவர் வாதாடினார். சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது. இந்தியத் துணைக் கண்டத்தின் தேசிய இனங்கள் சகவாழ்வு வாழ்வதற்கான வாய்ப்பை மறுத்துவிடவில்லை என்பது அண்ணாவின் வாதங்களின் சாராம்சம்.

அண்ணாவின் மறுவரையறைகள் தொடர்ந்தன. திராவிடநாடு கோரிக்கையைத் தொடர முடியாமல் அண்ணாவை முடக்கிய. இந்திய அரசியலமைப்பின் 16ஆவது சட்டத் திருத்தம் தொடர்பான மாநிலங்களவை விவாதங்களில் (டிசம்பர் 1963) அதைப் பார்க்க முடியும். பேச்சுரிமை, கருத்துரிமை குறித்த அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 19அய்த்தான் அப்போது அரசு திருத்தியது. அதன்படி சுயநிர்ணய உரிமையைக் கோரும் ஒரு கட்சி தேர்தலில் போட்டியிட முடியாது. பிரிவினை குறித்துப் பிரச்சாரம்கூடச் செய்ய முடியாது எனப் பல கட்டுப்பாடுகள் போடப்பட்டன.

தி.மு.கவைத் தடைசெய்வதற்கான அறிகுறி அது என்று சரியாகவே கணித்திருந்தார் அண்ணா. சுயநிர்ணய உரிமையைப் பெறுவது ஒருபக்கம் இருக்கட்டும். அதைப் பற்றிப் பேசுவதற்கே உரிமை இல்லையா என கேள்வி எழுப்புகிற நிலையில் அவர் இருந்தார். அப்போது இறையாண்மை என்கிற கருத்தாக்கத்துக்கும் ஒரு மறுவிளக்கம் தந்தார். 'எங்கள் கோரிக்கை இறையாண்மையை அபாயத்துக்குள்ளாக்குகிறது என்று ஏன் நினைக்கிறீர்கள்? இதற்குப் பதில் அளிக்கும் முன்பு, இறையாண்மை என்றால் என்னவென்று பொருள் கொள்கிறோம் என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். இறையாண்மை மக்களிடமே தங்கி இருக்கிறது என அரசியலமைப்பின்

முகவுரை கூறுகிறது. சட்டம் சார்ந்த இறையாண்மை, கூட்டாட்சி ஒன்றியத்துக்கும் அதன் உறுப்பு அலகுகளுக்கும் (மாநிலங்கள்) பிரித்தளிக்கப்பட்டுள்ளன. எங்களுடைய திட்டம் மாநிலங்களை மேலும் கூடுதலான, திறன்மிக்க இறையாண்மை உடையவையாக ஆக்குவதுதான் என்று ஏன் நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது? இறையாண்மை என்பது ஒட்டுமொத்தமாக ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருக்கவில்லை" என்று வாதிட்டார்.

இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவந்த தடைக்குப் பிறகு, தி.மு.க. பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது. ஆனால், மாநிலங்களின் இறையாண்மையை 'அதிகரிக்கிற', இந்தியாவை ஒரு 'பாதுகாப்புக் கழகமாக' (மட்டுமே) பார்க்கிற தன் மறுவியாக்கியானத்தை அண்ணா கைவிடவில்லை.

**தாய்க்குப் பெயரை மீட்டளித்த தனயன்!**

'திராவிடநாடு' எனவும் 'ஹோம்லேண்ட்' எனவும் இதழ்களை நடத்திய அண்ணாவின் மனத்திலிருந்த பொன்னுலகம் என்பது, தேசியத்தைவிட மிக ஆழமான உணர்வை வெளிப்படுத்தும் 'தாயகம்" என்கிற கருத்தாக்கமாகும். அவருடைய வீட்டின் பெயரும் அதுதான். சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதில் அவரது நீண்ட நெடிய பங்களிப்பு அதை உணர்த்தும், அவர் தாயின் பெயரை மீட்டளித்த தனயனாகப் பார்க்கப்பட்டதில் வியப்பில்லை.

அண்ணாவின் இறுதிக் கட்டுரைகளில் ஒன்று 1969 காஞ்சி பொங்கல் மலரில் அவர் எழுதியது. இதற்குப்பின் சில வாரங்களில் அவர் காலமாகி விடுகிறார். அதில் அண்ணா கூறுகிறார் – 'மாநிலங்களில் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுபற்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன். இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி" என்று. அப்பணியை அவர் தொடர முடியாமல் போனது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பேரிழப்பு.

தேசிய இன உரிமைக்களத்தில் அவர் முற்றுப்புள்ளி வைக்காமல் கால்புள்ளி போட்டுவிட்டுச் சென்றுள்ளார். தமிழ்நாட்டிலும் ஒரு சில மாநிலங்களில் மட்டுமே கூர்மை பெற்ற இனப்போராட்ட ஈட்டிகளை இந்திய துணைக் கண்டத்திலுள்ள அத்தனை தேசிய இனங்களுக்குமான கூட்டாயுதமாகவும் அவர் மாற்றிவிட்டார். அது ஒருநாள் துணைக் கண்ட அரசியலை மாற்றவும் கூடும்.

தொடக்கம் முதலே தனது மொழிக் கொள்கையில் எவ்வித சமரசத்திற்கும் ஆட்படாதவர் அண்ணா. இரு மொழிக் கொள்கையை தனது லட்சியமாகக் கொண்டு உறுதியுடன் களத்தில் நின்றவர் அண்ணா. தனது அரசியல் பயணத்தில் வெற்றியும் பெற்றவர் அண்ணா. இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலும் ஆங்கிலத்தை ஆதரிப்பதிலும் உறுதியாக இருந்தார். ஆங்கிலத்தை உலகத் தொடர்பு மொழியாக நிலைநிறுத்திய அவர் மிகுந்த தொலை நோக்கோடு அதனைக் கையாண்டார். அண்ணாவின் 'மொழிப்போர்க்களம்' அதனை நிலைநாட்டிட மாபெரும் தியாகத்தின் வழியாக மீட்டெடுத்தது என்பதனை 'இந்து தமிழ்திசை' நாளிதழ் தலைமை உதவி ஆசிரியர் திரு.செல்வபுவியரசன் விளக்கமாகப் பட்டியலிட்டுள்ளார். அவர் தனது கட்டுரையில் அண்ணாவின் மொழிக் கொள்கையின் வீச்சு இன்று இந்தியாவிலும், உலக அளவிலும் ஆங்கிலம் பயின்றதனாலான மிகப்பெரிய மாற்றங்களையும் விளைவுகளையும் விவரிக்கின்றார்.

சேவைப் பணித்துறையில் அயலகப் பணி எனப்படும் (அவுட்சோர்ஸிங்) ஒப்படைவுகளைப் பெறுவதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பணித்துறையில் சேவைப் பணித்துறையின் பங்களிப்பு 52.8% இந்தியாவின்

பொருளாதாரத்தில் இன்று ஆங்கிலம் செலுத்தும் செல்வாக்கைக் குறிப்பது இது. ஹிந்தி பேசாத, குறிப்பாக தென்னிந்திய மாநிலங்களே சேவைப் பணித்துறையில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. 2015-16இல் தங்கள் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களில் செய்யப்பட்டிருக்கும் முதலீடு, 55.6% தமிழ்நாட்டின் மொத்த உள்மாநில உற்பத்தியில், மற்றும் 54.6% சேவைப் பணித்துறையின் பங்களிப்பு. ஆங்கிலமின்றி இது சாத்தியமில்லை.

உலகமயமாக்கல் சூழலில், ஆங்கிலம் துணையில்லாமல் பொருளாதாரப் பாய்ச்சலுக்கு வழியே இல்லை, என இந்தியா உணர்கிறது. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின் வழி ஹிந்தியை மட்டுமே அலுவல் மொழியாக்கிக் கொண்டு ஆங்கிலத்துக்கு முடிவுகட்ட முடியாது. அதனால்தான் நாடறிந்த பொருளாதார அறிஞரும் மூத்த பத்திரிகையாளருமான சுவாமிநாதன் எஸ். அங்கலாசாரிய அய்யர் சொன்னார் - "உலகுடன் இந்தியா உரையாடுவதற்கான சாளரமான ஆங்கிலத்தைப் பாதுகாக்க அண்ணா பெரிதும் உதவியிருக்கிறார் என்று."

அண்ணாவின் 35ஆம் நினைவு நாளின்போது 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளிதழில் அவர் வாரம் தோறும் எழுதும் பத்தியில் இவ்வாறு எழுதினார்... 'தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் மேலாதிக்கத்தையும் பிராமணர்களின் ஆதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்தவர் அண்ணா. அந்த வகையில் அண்ணா இன்றும் நினைவு கூரப்படுகிறார்".

தமிழ்நாட்டில் காங்கிரசின் மேலாதிக்கத் தையும் பிராமணர்களின் ஆதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்தவர் என்ற வகையிலேயே பெரிதும் அண்ணா நினைவுகூரப்படுகிறார். ஆனால், இன்றைக்கு அவரை நாம் புதிய வெளிச்சத்தில் பார்க்க வேண்டியிருக்கிறது. அண்ணாதான் இந்தியாவை ஹிந்தி மேலாதிக்கத்திலிருந்து விடுவித்து, ஆங்கிலம் தொடர்வதை உறுதிப்படுத்தி, மேற்குலகிலிருந்து இந்தியாவுக்கு லட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற 'அவுட்சோர்ஸிங்' புரட்சிக்கான வழிவகையை ஏற்படுத்தியவர் அண்ணா. ஆங்கிலம் பேசுகின்ற மக்கள்தொகையின் காரணமாகவே இன்றைக்கு நாம் 'அவுட்சோர்ஸிங்' வாய்ப்புகளைப் பெறும் போட்டியில் முதலிடத்தில் இருக்கிறோம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறோம்".

### ஒரு குஜராத்தி உதாரணம்

ஆங்கிலத்தைப் புறக்கணித்து, இந்தியைத் தழுவிக்கொண்ட மாநிலங்கள் உலகமயச் சூழலுக்குப் பின் இந்தியை ஏற்றதன் பின்விளைவுகளை உணர்ந்தன. மிகச்சிறந்த உதாரணம், நாட்டுக்கே தொழில் வளர்ச்சியின் முன்னோடியாகப் பேசப்படும் மாதிரியான குஜராத், அங்குள்ள வல்லமை மிக்க நிலவுடைமைச் சமூகமான படேல்கள் கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு கேட்டுப் போராடி, மாநிலத்தையே ஸ்தம்பிக்க வைத்த நாள்களில் குஜராத்தி எழுத்தாளரான ஆகார் படேல் இப்படி எழுதினார் - 'எங்களிடம் ஆங்கிலம் இல்லை. அதனால் இந்தியாவின் புதிய நகர்ப்புற மத்திய வர்க்கத்தால் உருவாக்கப்படும் புதிய சேவைப் பணித் தொழில்களில் பங்குபெற முடியவில்லை" என்று.

ஆகார் படேல் மேலும் குறிப்பிட்டார். 'படேல்களின் போராட்டங்களைப் போல மும்பை, பெங்களூரு, சென்னை, அய்தராபாத், குருகிராம் மற்றும் நொய்டா ஆகிய நகரங்களில் போராட்டங்கள் நடக்காது. அந்நகரங்களில் இளைஞர்கள் பணிபுரிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்களால் 'ஒயிட் காலர்" வேலைகளை எளிதாகப் பெற முடியும். ஆங்கிலத்தின் துணையோடு பெரும்பாலானோர் இந்த வேலைவாய்ப்புகளைப் பெறுகிறார்கள். அதன் வழியாக உலகப் பொருளாதாரத்தோடு தங்களை ஒருங்கிணைத்துக் கொள்கிறார்கள். இந்த வாய்ப்பு குஜராத்தில் உள்ள பெரும்பாலான இளைஞர்களுக்குக்

கிடைக்கவில்லை. ஏனென்றால், அரசுப் பள்ளிகள் இங்கு அய்ந்தாம் வகுப்பு வரையில் ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில்லை.”

**சுதந்திர இந்தியாவில் ஆங்கிலம் கடந்து வந்த பாதை**

இந்தியாவின் ஆட்சிமொழியாக ஹிந்தியைத் தேர்ந்தெடுப்பது குறித்து, அரசியல் நிர்ணய சபையில் வாக்கெடுப்பு நடந்தபோது, ஹிந்திக்கு ஆதரவாக 77 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் விழுந்தன. அவையின் தலைவர் தனது ஒரே வாக்கை ஹிந்திக்கு ஆதரவாகச் செலுத்தியபோது ஆட்சிமொழியானது ஹிந்தி. ஹிந்தி பேசாத மாநிலங்களின் எண்ணங்களை ஒரே ஒரு வாக்கில் தோற்கடித்து ஹிந்தியை ஆட்சிமொழியாக்கியவர்கள், அடுத்த கட்டமாக ஆங்கிலத்துக்கு முடிவுகட்ட எத்தனித்தார்கள். ‘ஹிந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி. ஆனால், 15 ஆண்டுகள் வரை மட்டும் ஆங்கிலமும் கூடுதலாகப் பயன்படுத்தப்படலாம்” என்ற கெடுவை ஹிந்தி பேசாத மக்கள் மீது திணித்தபடிதான் - இ ல் இந்தியா குடியரசு ஆனது. அதாவது, 1965 வரை மட்டுமே ஆங்கிலம் தொடர்புமொழியாக இருக்கும் என்றது, அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி 17, கூறு 343.

அரசியலமைப்புச் சட்டத்தின் 17ஆவது பகுதிக்கு உயிர் கொடுப்பதற்காக 1955இல் பி.ஜி.கேர் தலைமையில் ஆட்சிமொழிக் குழு அமைக்கப்பட்டது. விழித்தெழுந்தது தமிழ்நாடு. தமிழார்வலரான ஏ.சுப்பையாவின் ஏற்பாட்டில் 1956இல் ராஜகோபாலாச்சாரியாரின் இல்லத்தில் தலைவர்களும் தமிழறிஞர்களும் கூடினார்கள். அக்கூட்டத்தில் ஹிந்தித் திணிப்பை எதிர்த்து முதல் கையொப்பமிட்டார். ராஜாஜி. ஹிந்தி மட்டுமே அலுவல்மொழி என்ற பகுதி-17ஐ உள்ளடக்கிய இந்திய அரசியல் சட்டத்தில் முதல் கையொப்பமிட்ட ராஜகோபாலாச்சாரியார்தான் ஹிந்தித் திணிப்பை எதிர்த்தும் முதல் கையொப்பம் போட்டார். 1937இல் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தியவரும்கூட அவர்தான். 20 ஆண்டுகளுக்கு முன் ஹிந்தித் திணிப்பையும் அதற்குக் காரணமான ராஜகோபாலாச்சாரியாரையும் எதிர்த்த பெரியார் இரண்டாவது கையொப்பம் இட்டார். 1949இல் திராவிடர் கழகத்தை விட்டு பிரிந்து தி.மு.க. உருவான பிறகு தி.மு.கவினர் பங்கேற்கும் கூட்டங்களைத் தவிர்த்த பெரியார், முதன்முதலில் அண்ணாவோடு கைகோத்தது அந்தக் கூட்டத்தில்தான்.

தொடர்ந்து தமிழ்நாட்டில் வெடித்த மொழிப்போர், அதில் தன்னுயிர் கொடுத்து ஹிந்தி ஆதிக்கத்துக்குத் தடை போட்ட திராவிட இயக்கத்தினருடைய தியாகம் ஆகியவற்றின் விளைவாகவே இன்றும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்கிறது. விளைவாக, மொழிப் பாடமாகவும் பயிற்றுமொழியாகவும் நாடெங்கும் ஆங்கிலம் கற்பிக்கப்படும் சூழல் உருவானது. அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைக்கு இதில் முக்கியமான பங்குண்டு.

21.09.1957 அன்று திருவண்ணாமலையில் நடந்த தி.மு.க. மாநாட்டின் முதல் நாள், ஹிந்தி எதிர்ப்பு மாநாடாக நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் சைவ சமயவாதியான அருணகிரி அடிகள். 1958இல் தமிழ்நாடு சட்டமன்றத்திலும் அலுவல்மொழி சார்ந்த பிரச்சினையைத் தி.மு.க. கையிலெடுத்தது. குறைவான உறுப்பினர் எண்ணிக்கையைக் கொண்டிருந்த எதிர்க்கட்சி என்ற நிலையிலும், அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி 17 திருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைச் சட்டமன்றத்தின் முன் வைத்தது. க.அன்பழகன் அவர்களால் முன்மொழியப்பட்ட அந்தத் தீர்மானத்தை 14 உறுப்பினர்கள் மட்டுமே ஆதரித்தார்கள் 121 பேர் எதிர்த்து வாக்களித்தார்கள். மேற்கு வங்க சட்டமன்றத்தில் ஹிந்தியை ஆட்சிமொழியாக ஏற்க மாட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.கவோ அந்தத் தீர்மானத்தை, அடுத்த மக்கள் மன்றத்தில்தான் நிறைவேற்றியது.

## அண்ணா முன்னெடுத்த போராட்டங்கள்

1960இல் குமாரபாளையத்தில் தி.மு.க. பொதுக்குழு கூடி, போராட்டங்களில் இறங்கியது. 1963இல் நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய அண்ணா. ஹிந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார். பொதுமொழியின் அடிப்படையில் இந்தியாவைப் பலப்படுத்திவிட முடியாது என்பதை வலியுறுத்தினார். அவரது உரையின் இடையே தி.மு.கவின் மொழிக் கொள்கை என்ன என்ற கேள்வியை எழுப்பினார் அக்பர் அலிகான். 'எட்டாவது பட்டியலில் உள்ள அத்தனை மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆட்சிமொழிகளாகும் தகுதி தரப்பட வேண்டும், பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாகும் வரை ஆங்கிலமே தொடர்ந்து இருக்கட்டும் என்பதே எங்கள் கொள்கை" என்றார் அண்ணா.

1963இல் ஆட்சிமொழிச் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 1965 முதல் ஹிந்தி மட்டுமே அலுவல்மொழி என்பது உறுதிசெய்யப்பட்டது. மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கும் என்ற நேருவின் உறுதிமொழியைக் கைவிட்டது காங்கிரஸ் அரசு. தமிழ்நாடு போர்க்களமானது. தீக்குளிப்பு, துப்பாக்கிச் சூடு, தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்று நிலைமை கட்டுமீறியது. ஹிந்தி பேசாத மாநிலங்களின் மொழியுரிமைப் போராட்டத்துக்காகத் தமிழ்நாடு பல நூறு உயிர்களை விலையாகக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து, மேற்குவங்க முதலமைச்சர் பி.சி.சென், ஆந்திர முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி, கர்நாடக முதலமைச்சர் நிஜலிங்கப்பா ஆகியோரும் ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பில் தீவிரம் காட்டினார்கள். 1968இல் ஆங்கிலமே தொடர்புமொழியாக நீடிக்கும் என்று ஆட்சிமொழிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தார் அண்ணா. அப்போது அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார்.

ஆங்கிலத்தைத் தொடர்புமொழியாக நீடிக்க வைத்து இந்திய மாநிலங்களை உலகத்தோடு உறவாட வைத்தவர் என்பதால் மட்டுமல்ல, அனைத்து இந்திய மொழிகளின் அரசியல் உரிமைகளுக்கும் குரல்கொடுத்தவர் என்பதாலுமே அகில இந்தியத் தலைவராக உயர்ந்து நிற்கிறார் அண்ணா.

## உலகப் பொதுமறையும் மறையாளரும்

அரசியல் தளம்போலவே கலாச்சாரத் தளத்திலும் திட்டவட்டமாக மாற்று உள்ளடக்கங்களை அண்ணா யோசித்தார். தமிழ் நிலத்திலிருந்து பணியாற்றிய அவர், இங்குள்ள பேதங்களைக் களைந்திட அவற்றின் முன்மாதிரியை வரலாற்றின் நினைவுகளிலிருந்து உருவாக்கத் தலைப்பட்டார். சங்க இலக்கியங்களும் சங்க காலச் சமூகமும் அவரது கருவிகளாயின, தமிழர்கள் ஹிந்துக்கள் அல்லர் – அவர்களுக்கு என்று தனித்த நெறி உண்டு என்றவர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலரின் ஓருலகக் கூற்றைத் தமிழர்கள் கையில் மாற்று மந்திரமாக்கித் தந்தார். தங்களுடைய ஒவ்வொரு விழுமியத்துக்கும் உலகளாவிய பார்வை தர விரும்பினார்.

வன்முறை என்றால் ஆயுத வன்முறை மட்டுமல்ல, தேசியம் தேச ஒற்றுமை போன்ற தத்துவ வன்முறையும் கூடாது என்று சொன்ன அண்ணா போர் வன்முறை, ஆக்கிரமிப்பு, ஆதிக்கம் பிரிவினை வெறுப்புக்கு எதிராகப் பேசும் திருக்குறளைத் தந்த, எல்லைகளுக்கு அப்பாற்பட்டுச் சிந்தித்த – தமிழ்ப் புலமை சான்ற வள்ளுவரை உலக வழிகாட்டி என்றார், குழந்தைகளுக்கு ஜாதி, மத, அடையாளம் தவிர்த்த தமிழ்ப் பெயர் சூட்டுதல் முதல் வாழ்க்கைத் துணையை ஜாதி மதச் சடங்குகள் வரையறைக்கு அப்பாற்பட்டுத் தேர்ந்தெடுக்கும் சுயமரியாதைத் திருமணத்துக்கான சட்ட அங்கீகாரம் வரை பண்பாட்டுத் தளத்தில் அவர் யோசித்த மாற்றங்களுக்கு வள்ளுவர் சாலப் பொருத்தமாக இருந்தார். பிறப்பை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை வரையறுக்கும் பிராமணியத்துக்கு மாற்றான

ஒன்றை நிறுவ 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சொன்ன வள்ளுவரை உலகப் பொதுமறையாளர் என்றும், திருக்குறளை உலகப் பொதுமறை என்றும் சொன்னார் அண்ணா. தமிழ் ஞானத்தின் குறியீடாக திருவள்ளுவரை அவர் கருதினார். பின்னர் அண்ணா வழிவந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திருவள்ளுவரை அந்த இடத்தில் நிறுவினார்.

பிராமணர்கள் முதல் தலித்துகள் வரை. முஸ்லிம்கள் முதல் சீக்கியர்கள் வரை எந்தப் பிராந்தியத்திலிருந்தும் வந்து இங்கு குடியேறியோர் உள்பட யாவரும் கொண்டாடும் அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகைக்கு உழவர் உழைப்பாளிகளுக்கு நன்றி கூறும் நாள், தாய்த் தமிழ்நாட்டுக்கு அதன் பெயர்மீட்ட நாள் என்று ஜாதி, சமய, வரையறைக்கு அப்பாற்பட்ட 'தமிழர் திருநாள்" என்ற உள்ளடக்கத்தை அவர் சேர்த்தது பண்பாட்டுத் தளத்தில் அண்ணா சிந்தித்த மாற்றங்களின் உச்சம்.

"தமிழன் யாருக்கும் தாழாமல் யாரையும் தாழ்த்தாமல் யாருக்கும் எஜமானாக இல்லாமல் யாருக்கும் அடிமையாகவும் இல்லாமல் யாரையும் சுரண்டாமல் யாராலும் சுரண்டப்படாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே என்னுடைய குறிக்கோள்" என்ற அண்ணாவின் கனவு அதோடு முற்றுப் பெற்றதல்ல, மனிதன் கடவுளுக்குக்கூட அடிமையாக இருக்கக் கூடாது என்று நினைப்பவன் நான். தமிழன் தமிழ்நாடு தமிழ்ச்சமூகம் என்ற வரையறைகளைத் தாண்டிவிட்டால் அண்ணாவின் சிந்தனை, கனவு உலகிலுள்ள ஒவ்வொரு இனத்துக்குமான கனவாகவும் ஒவ்வொரு சமூகத்துக்குமான கனவாகவும் விடியலாகவும் பரிணமிக்கக் கூடியது. தேசியம், தேசிய அரசு எனும் கருத்துகளையெல்லாம் தாண்டி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று ஓருலகமாக உறவாடச் செய்யக்கூடிய அரசியல் வாகனம் அது. இந்தியாவை உண்மையான குடியரசாக்கும் கனவும் அது என, தனது மாபெரும் தமிழ்க்கனவு" எனும் அண்ணாவைப் பற்றிய நூல் தொகுப்பில் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான சமஸ் விரிவாக எழுதியுள்ளார்.

### தமிழ்ப் பண்பாட்டுக்குப் புத்துயிர் அளித்தவர் அண்ணா!

தமிழ்ப் பண்பாட்டு ஆய்வாளர்களில் முக்கியமான ஒருவரான பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்கள் வழக்காறு சார்ந்த பார்வையில் புதுவெளிச்சம் பாய்ச்சியவர். திராவிடம் எனும் சிந்தனை எப்படித் தமிழ் மண்ணில் உருக்கொண்டது. அதற்கான வரலாற்றுப் பண்பாட்டுப் பின்னணி என்ன என்று தர்க்க பூர்வகமாக நிலைநாட்டியவர். பண்பாட்டுத் தளத்தில் அண்ணாவின் பங்களிப்புகளைத் தனது பாணியில் கீழ்க்காணுமாறு பதிவு செய்துள்ளார்.

"நான் அண்ணாவை நேரில் பார்ப்பதற்கு பல ஆண்டுகள் முன்னதாகவே எழுத்து வழியாக என் வாழ்க்கைக்குள் வந்துவிட்டார். எங்களுடையது அரசியலுணர்வு மிகுந்திருந்த காலகட்டம். நானெல்லாம் பத்து வயதிலேயே 'திராவிடநாடு' 'முரசொலி' ஏடுகளைப் படிக்க ஆரம்பித்துவிட்டேன். பெரும்பாலான பையன்களுக்குப் பாடப் புத்தகங்களைத் தாண்டி இத்தகைய வாசிப்புப் பழக்கம் இருக்கும். 1962 தேர்தலில் அண்ணா தோற்றபோது, நானும் எனது வகுப்பு நண்பர்களும் பள்ளி மைதானத்தில் நின்று அழுதது நியாபகம் வருகிறது. அப்போது 8ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தோம்.

### திராவிட அரசியலும் தமிழ் அரசியலும் வேறுவேறு அல்ல!

தமிழ்தான் இங்கே திராவிட அரசியலுக்கான உயிர், திராவிடம் என்று எதைச் சொல்கிறோம்? இரு விளக்கங்கள் கொடுக்கலாம். இனம் சார்ந்து ஆரியர், திராவிடர் என்று இங்குள்ள இரு இனங்களில், எல்லா இடங்களையும் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முற்படும் ஆரியப் பண்பாட்டுக்கு மாற்றாக, பன்மைத்துவத்தைப் பேசுகையில் திராவிடம்

பேசுகிறோம். அடுத்து இடம் சார்ந்தது தென்னகத்தை – கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, கேரளம், தமிழ்நாடு ஆகியன இணைந்த பகுதியைக் குறிப்பிடுகையில் திராவிடம் பேசுகிறோம். ஆரியம் – திராவிடம் வரலாற்று வேறுபாடுகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டவை. பண்பாட்டுத் தளத்திலும் இந்த வேறுபாடுகள் பல நிலைகளில் இன்றளவும் நீடிக்கின்றன.

தென் மாநிலங்களிலும் திராவிட மொழி பேசுகின்றவர் களுக்கென்றும் தனித்த பண்பாடு இருக்கின்றது. பிராமணர்கள் அல்லாத பிற ஜாதிகள் மத்தியிலும் பொதுவான அம்சங்கள் நிறையவும், ஒவ்வொரு ஜாதிக்குமான சின்னச் சின்னப் பண்பாட்டு அசைவுகள் இருப்பதையும் பார்க்கலாம். ஓர் உதாரணத்திற்கு, இந்தச் சமூகங்களில் தாய்மாமனுக்குரிய மரியாதையைச் சொல்லாம். தாய்வழிச் சமூகத்தின் எச்சப்பாடாகத் தொடர்கிறது இது. ஆரியப் பண்பாட்டில் இது கிடையாது. அடுத்து இறந்தவரது சடலத்திற்குக் கொடுக்கப்படும் மரியாதை. நிறைய சொல்லலாம். திராவிட அரசியல் என்பதன் அடிநாதம் அவரவர்க்குரிய பிரதிநிதித்துவம், அதிகாரத்தை அவரவர்க்குக் கொடு என்பதுதான். இங்கே அரசியல் பண்பாடு எல்லாவற்றிலும் பிராமணியத்தின் ஆதிக்கம் இருப்பதால், பிராமணியத்துக்கு எதிரான இயக்கமாக அது உருவெடுத்தது. ஆனால், தொடக்கம் முதலாகவே பிராமணர்களை எதிரியாக்கவில்லை. இன்னும் ஒருபடி மேலே போய் பிராமணர்களையும் இயக்கத்திலும் கொண்டு வந்தார் அண்ணா. சமூகரீதியாக பிராமணர்கள் மட்டும் அல்லாது இங்கேயே வந்து தங்கிவிட்ட மாற்று மொழியினரையும் உள்ளடக்கும் விதமாகத் தமிழையும் தமிழுணர்வையும் இணைப்புச் சங்கிலியாக்கினார்.

திராவிடநாடு என அவர் முன்வைத்த நாட்டினுடைய நிருவாகமுங்கூடத் தெளிவாக மலையாளிகளுக்கு, தெலுங்கர்களுக்கு, கன்னடர்களுக்கு, தமிழர்களுக்கு என்று அவரவர்க்குரிய தனிநிலத்தையும் அங்கே அவரவர் சுயாட்சியையும் உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது. ஒரு கூட்டரசாக அது இயங்கலாம் என்று அவர் நினைத்தார். ஆகையால் திராவிட அரசியலும் தமிழ் அரசியலும் வேறுவேறு அல்ல. தமிழ் அரசியலுக்குக் கூடுதல் தத்துவ பலத்தைத் தருவதுதான் அண்ணாவின் திராவிட அரசியல்.

### அண்ணா உண்டாக்கிய முக்கியமான பண்பாட்டு மாற்றங்கள்

இந்தியத் துணைக் கண்டத்தில் ஜாதிக்கும் பிராமணியத்துக்கும் உள்ள செல்வாக்கை அண்ணா முழுமையாக உணர்ந்திருந்தார். அதனால்தான் அரசியல் தளத்தில் பங்கெடுக்கும் ஓர் இயக்கத்தின் லட்சியத்தில் ஜாதி ஒழிப்பையும் முக்கியமான ஒன்றாக்கினார். சகலத்திலும் பிராமணியம் கலந்திருப்பதால்தான் ஒவ்வொரு தளத்திலும், அதற்கு மாற்றான ஒன்றை நிறுவ முற்பட்டார். தமிழ்நாட்டு அரசியல் களத்திலிருந்து ஜாதிப்பெயரை ஒழித்ததே அண்ணாவின் சாதனைகளில் ஒன்றுதான். இஸ்ரோவின் தலைவராக இருந்த விஞ்ஞானியே மாதவன் நாயர் என்று ஜாதியைக்கூடச் சூடிக் கொள்ளும் நாடு இது. அரசியலில் சொல்ல வேண்டுமா? மேனன்கள், கவுடாக்கள் ராவ்கள், சர்மாக்கள் முகர்ஜிக்கள்... இந்தியாவில் எங்கே ஜாதி ஓட்டு இல்லாத தலைவர் இருக்கிறார் தமிழ்நாடு தவிர? எங்களுடைய நெல்லை மாவட்டம் ஜாதி உக்கிரத்தில் உழன்ற ஊர். அண்ணாவின் அரசியல் எப்படிச் சூழலை மாற்றியது என்பதற்கு நானெல்லாம் நேரடி சாட்சியம். ஜாதி கேட்பது கேவலம் என்ற உணர்வை ஒரு தலைமுறைக் காலகட்டத்திற்குள் இங்கே அவர் கொண்டு வந்துவிட்டார். பெரிய சாதனை அல்லவா இது!

இலக்கிய மரபை அவர் மீட்டெடுத்தார். அதன்வழி புதிய மதிப்பீடுகளை உருவாக்கினார். தமிழ்நாட்டின் அரசியலுக்கு என்று தனிக் கலாச்சாரத்தை உருவாக்க முற்பட்டார். எல்லோரையும் உள்ளணைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. பொங்கல் பண்டிகைக்குப் புது

உருவம் கொடுக்க முற்பட்டாரே.. ஒரு சமூகம் இளைப்பாறிக்கொள்கிற நிகழ்ச்சி திருவிழா. பண்டிகையும் அப்படித்தான். இது அந்தந்தப் பகுதி மக்களோடும் உற்பத்தியோடும் மண்ணோடும் பிணைக்கப்பட்டிருக்கிறது. சமூக மாற்றம் என்பது அரசியல் தளத்தில் மட்டுமே வேர் பிடிக்காத மாற்றம்; நீடித்து நிலைக்காது என்பதும் அண்ணாவுக்குத் தெரிந்திருந்தது. அதனுடைய விளைவாகவே தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகைக்குப் புத்துயிர் கொடுத்தார் அண்ணா. எல்லோரையும் 'தமிழர்கள்' என்ற அடையாளத்தின் கீழ் ஒன்று திரட்டும் இலக்கும் சமத்துவ லட்சியமும் அதன் பின்னே இருந்தன. அண்ணாவுக்குப் பிறகு, கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியின்போது தமிழ்ப் புத்தாண்டு என்று தை முதல் நாளிலிருந்து கணக்கைத் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதும்கூட இதன் தொடர்ச்சிதான். ஹிந்து-ஹிந்தி-ஹிந்துஸ்தான் எனும் ஒரே மதம், ஒரே மொழி, ஒரே நாடு என்கிற கொள்கையின் கீழ் இந்தியாவைக் கொண்டுவரும் பண்பாடுகள் அனைத்துக்கும் மாற்று வழிகளைச் சிந்தித்தவர் என்று நீங்கள் அண்ணாவைப் படிக்கும்போது விளங்கிக் கொள்ளலாம். அண்ணாவைப் பொறுத்த மட்டில் இந்தியக் கலாச்சாரம் என்று ஒன்று கிடையாது. வேண்டுமானால், இந்தியக் கலாச்சாரங்கள் என்று சொல்லலாம். ஏனென்றால், பல்வேறுபட்ட கலாச்சாரங்களின் தொகுப்பே இந்தியா, இதற்கு வழிகாட்டும் நிலமாகவே தமிழ்நாட்டை அண்ணா கண்டார். அதற்கான பாதையாக ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் இருந்த பேச்சு, எழுத்து, உரையாடல்கள், வாசிப்பு வெளியை வெகுமக்களை நோக்கி நகர்த்தினார் அண்ணா.

இவையெல்லாம்தான் பெரியாரின், அண்ணாவின், திராவிட இயக்கத்தின் சாதனை என்று சொல்கிறேன். தமிழ் அரசியலுக்குப் புத்துயிர் கொடுத்தவர் அண்ணா. அப்படிக் கொடுக்கும்போது மத, இன வெறியூட்டாமல், இந்த மண்ணின் உணர்வைப் பெறும், தமிழுணர்வைப் பெறும் ஒவ்வொருவரும் தமிழர் என்பதை அடிப்படையாக்கினார். பிராமணரல்லாதோர் இயக்கமாகப் புகழ்பெற்ற ஓர் இயக்கத்தின் வழிவந்த கட்சியில் ஜெயலலிதா என்ற பிராமணர் எப்படித் தலைமைக்கு வந்தார் என இதைப் பார்க்கக்கூடாது. அந்த இயக்கத்தை அவரும் உள்வாங்கினார் என்றும், அதனால் தலைமை ஏற்றார் என்றும்தான் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீடு சாதனையில் ஜெயலலிதாவுக்கும் பங்கு இருக்கிறது, இல்லையா? எம்ஜிஆர் தன்னை ஒரு மலையாளியாக நினைக்கவே இல்லையே.. டில்லி ஆதிக்கத்துக்கு எதிராக எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் கூடப் பேசியிருக்கிறார்கள்.

இனவுணர்வை மதவுணர்வு வெல்ல முடியாது. ஏனென்றால், இனம் உங்கள் பிறப்போடும், உடலோடும் உயிரோடும் கலந்திருக்கிறது. மதம் நீங்கள் நினைத்த மாத்திரத்தில் மாற்றிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மேலும், மதம் எந்தக் காலத்திலும் இனத்துக்கான அடையாளமாக இருக்கவே முடியாது. ஏனென்றால், மதம் மாறும்போது அடையாளம் மாறுவதில்லை. இத்தாலியில் இருக்கும் கிறிஸ்துவமும் தமிழ்நாட்டில் இருக்கும் கிறிஸ்துவமும் ஒரே இன அடையாளமாக என்றுமே மாற முடியாது.

அண்ணாவின் மிகப் பெரிய சாதனையாக எதைச் சொல்வீர்கள் என்று கேட்டால், 'தமிழ் நிலப்பரப்புக்குத் தமிழ்நாடு எனப் பெயரிட்டது. இந்த உலகம் உள்ளளவும் தமிழ்நாடு என அவர் சூட்டிய பெயர் நிலைக்கும். அது அவரது கனவைக் காலமெல்லாம் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டுசெல்லும்".. என்று ஓங்கி ஒலிப்பேன்..

**சமஸ்கிருதப் பேரலையைத் தடுத்து நிறுத்திய சாமான்யன்**

இந்தியாவின் புகழ்பெற்ற மூத்த ஊடகவியலாளரும் அரசியல், வரலாற்று ஆய்வாளருமான டி,ஜே.எஸ். ஜார்ஜ், 'நியு இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழின் தலையங்க ஆலோசகர்; மூத்த பத்திரிகையாளர்,

அண்ணாவைப் பற்றி 'சமஸ்கிருதப் பேரலையைத் தடுத்து நிறுத்திய சாமான்யன்' எனப் புகழாரம் சூட்டி தனது பதிவில் எழுதியிருக்கிறார். இந்திய அரசியலில் வரலாற்றைச் செதுக்கியவர்களில் முதன்மையான ஒருவர் அண்ணா எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலக அறிஞர்கள் வரிசையில் இடம்பெறத்தக்க அற்புதமான சிந்தனையாளர். தொடர்ந்து, அவருடைய முன்னோடி தந்தை பெரியாரைப் போலவே அவரது செயல்பாடுகள் தென்னிந்திய எல்லைகளுக்குள்ளேயே அடங்கிவிட்டிருந்தது எனக் குறிப்பிடுகின்றார். அவர்களது நோக்கங்களைப் பிராந்திய அளவில் குறுகியவை எனப் பாரம்பரியமான வரலாற்றாசிரியர்கள் போதுமான அளவு கவனத்தில் கொள்ளவில்லை. உண்மையில் தேசக் கட்டுமானத்தில் மொழியின் பிரதான சக்தியை முழுமையாகப் பிரதிபலித்தவர் அண்ணா. மொழிப் பிரச்சனையில் தொடக்கம் முதலே இந்தியாவின் நிலைப்பாடு தவறாகவே இருந்திருக்கிறது. பொதுவாழ்வில் மொழி அரசியலின் வளர்ச்சி தவறானதாகக் கருதப்பட்டது.

அண்ணாவைப் பொறுத்தவரை மொழி என்பது மக்களின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் சாரம் எனக் கருதினார். பெரியார், அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகிய மூவரும் இதற்குமுன்பு பேசப்பட்டிராத திராவிடப் பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுத்தனர். இதன்மூலம் இந்தியாவின் சமூக அரசியல் முதிர்ச்சிக்கு நீடித்த பங்காற்றினர்.

தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான வேறுபாட்டை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதை அண்ணா தவறாகக் கருதவில்லை. உண்மையில், இந்த வேறுபாடு ஆழமாக வேரூன்றியது என்று கருதிய அவர், திராவிடப் பகுதி நிலம் இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்றே விரும்பினார். இந்த நோக்கத்தின் தீவிரத் தன்மை சுட்டிக் காட்டப்பட்டபோது, தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்தார். ஹிந்திக்கு எதிராக நீண்ட யுத்தம் நடத்தியவர் அண்ணா. சர்வாதிகார முறையில் பிறர் மீது இந்தி திணிக்கப்படுவதை அவர் எதிர்த்தார். 1938இல் பள்ளிகளில் ஹிந்தியைக் கட்டாயமாக்கினார் மதறாஸ் மாகாண அரசின் தலைமைப் பொறுப்பில் இருந்த சி.ராஜகோபாலாச்சாரி, மிகப் பெருமளவில் நடந்த போராட்டங்கள், போலீஸ் தடியடியில் இருவர் மரணம் ஆகியவை, 1940இல் இந்த ஆணையை ராஜாஜி திரும்பப் பெறவைத்தன. அதுதான், அன்றைய காலகட்டத்தின் பொது உணர்வாக இருந்தது. இதை அண்ணா மறக்க முடியாத வகையில் குறிப்பிட்டிருந்தார். 'நாட்டின் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழி என்பதற்காக ஹிந்தி பொதுமொழியாக இருக்க வேண்டும் என்றால், நாட்டில் எண்ணற்ற எலிகள் இருக்கும்போது, புலியை ஏன் தேசிய விலங்காக்க கருதுகிறோம்?" அதே ராஜாஜி, பின்னாட்களில் 'ஹிந்தி அரசியலின்" தீவிர எதிர்ப்பாளரானது வரலாற்றின் முரண்களில் ஒன்று.

அண்ணா ஒரு சாமானிய மனிதராகவே வாழ்ந்தார். தன்னைச் சுற்றியுள்ள சாமானிய மனிதர்களின் வாழ்க்கை, தேவைகள் குறித்து அக்கறை கொண்டிருந்த அவர், தனக்கென்று எதையும் விரும்பவில்லை. ஒரு முதலமைச்சர் எனும் முறையில் கிடைக்கும் அரசு வசதிகளையும் அவர் ஏற்க மறுத்தார். தன் ஆதர்ச நாயகர்களான லிங்கன், கரிபால்டி, மாஜினி ஆகியோரின் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டார்.

சினிமா எனும் ஊடகத்தை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வது என்பது அண்ணாவின் உத்தி. அவர் சிறந்த நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர் என்பது மட்டுமல்லாமல் சில சமயம் நடிகராகவும் இருந்தவர் என்பதால், இது அவருக்கு இயல்பாகவே வந்திருக்கலாம். அதேசமயம், எந்த மாதிரியான கொள்கைகளைப் பின்பற்றுவது என்பதில் தெளிவான சிந்தனையுடன் கூடிய ஓர் அரசியல் ஆளுமையாக இருந்தார்.

மதத்தின் பெயரால் நடத்தப்பட்ட சுரண்டலுக்கு எதிராகப் போராடினார் அண்ணா. அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை நீக்குமாறு உத்தரவிட்டார். ஆனால், ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்” எனும் முழக்கத்தை முன்வைத்தார். திருநீறு பூசாத ஹிந்து, சிலுவை அணியாத கிறிஸ்துவர், குல்லா அணியாத முஸ்லிம் என்று தன்னைக் குறிப்பிட்டார். மதறாஸ் மாகாணத்தின் பெயரைத் தமிழ்நாடு என்று பெருமையுடன் மாற்றினார். வரலாற்றுச் சாதனை படைத்தார்.

அவரது எளிமை, தன்னலமற்ற தன்மை, திராவிட இயக்கத்துக்காக அவர் காட்டிய அர்ப்பணிப்பு ஆகியவை அண்ணாவைக் கற்பனைக்கெட்டா புகழ்கொண்ட மக்கள் தலைவராக்கின. 1969இல் அவர் மறைந்தபோது பத்தாவது உலக அதிசயம் நிகழ்ந்தது. அவரது இறுதி நிகழ்ச்சியில் 1.5 கோடிப் பேர் கலந்துகொண்டனர். இதுவரை இல்லாத வகையில் மிக அதிகமான எண்ணிக்கையில் மனிதர்கள் கலந்துகொண்ட நிகழ்வு அது. காந்தியின் இறுதி நிகழ்ச்சியில் 20 லட்சம் பேரே கலந்து கொண்டனர்.

அண்ணா அத்தனை திறமைகள் கொண்டவர். அவருடைய சிந்தனைகள் எண்ணற்றவை. நமது காலகட்டத்தில் திராவிட அடையாளம் உயிர் பெற்று, வரலாற்றில் தனது இடத்தைக் கோரியது என்றால், அறிஞரும் செயல்பாட்டாளருமான அண்ணாவின் நம்பிக்கையும் அர்ப்பணிப்பும்தான் முக்கியக் காரணம். தென்னிந்தியாவின் சிறப்புமிக்க கோயில் கட்டடக் கலையை உருவாக்கியது மட்டுமல்லாமல், கெமர், தாய், சாவகம் ஆகிய மொழிகளின் மேம்பாட்டில் தாக்கம் செலுத்திய ஓர் அறிவுப் பாரம்பரியத்தின் உண்மையான வழித்தோன்றல் என்பதை மெய்ப்பித்தவர் அண்ணா. அந்தப் புத்தாக்கச் சிந்தனையின் மகத்தான சாதனைகள், இந்தியாவை மூழ்கடித்த சமஸ்கிருத சக்தியின் அலையில் மூழ்கிப் போயின. அந்தச் சமஸ்கிருதக் கோலியாத்தை ஓர் எளிய டேவிட் எதிர்கொள்ளக் காலம் பிடித்தது. அந்த டேவிட்தான் அண்ணா. அவர் காலத்தைக் கடந்த மனிதர்.

### அரசு நிருவாகத்தில் அண்ணாவும் அவர் வழிவந்தவர்களும் உண்டாக்கிய மாற்றங்கள்

அன்றைய சென்னை மாகாணத்தின் அரசு இயந்திரம் இந்தியாவிலேயே நிருவாகத் திறமையில் முதலிடத்தில் இருந்தது. மூத்த, அதிகாரிகளில் பலர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அய்.சி.எஸ். அதிகாரிகளாக இருந்தவர்கள். அவர்கள் காங்கிரஸ் சகாப்தத்தில் வளர்ந்தவர்கள். அரசின் திட்டங்கள் பெருமளவில் டில்லியிலிருந்து வடிவமைக்கப்பட்ட சூழலில், மாநில அரசு நிருவாகம், டில்லியின் எண்ணங்களையும் முடிவுகளையும் உள்வாங்கிக்கொண்டு செயல்பட்டது. அவர்களுடைய பணிக் கலாச்சாரம் என்பது எதையும் விரைவாக தார்மீக நெறிகளுக்குட்பட்டு, விதிகளின்படியும் நடைமுறைகளின்படியும் செய்வதுதான் என்றாலும், ஒரு கட்டுத்திட்டத்துக்குள் பணியாற்றிப் பழக்கப்பட்டது என்றும் சொல்லலாம். பிரிட்டிஷாரிடமிருந்து நீண்டு வந்தது அது. நிதிக் கொள்கையில் சிக்கனத்தையும் கறாரையும் கடைப்பிடித்தது. குறிப்பாக, அரசுக்கு ஆதாயம் இல்லாத எதையும் செய்வதில் பெரிய ஆர்வம் இல்லாதது.

### கீழிருந்து மேல்நோக்கி வந்த சிந்தனை

இப்படிப்பட்ட சூழலில்தான், அண்ணா 1967இல் முதல்வராகப் பதவியேற்றார்;. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ‘ஒரு ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி வழங்க வேண்டும்” என்பது அண்ணாவின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. ஏனென்றால், அன்றைய சென்னை மாகாணம் அரிசிப் பஞ்சத்தால் அல்லலுற்றுக் கொண்டிருந்தது. உணவு தானிய உற்பத்தியில், சென்னை மாகாணத்தின் நிலை அன்றைக்குச் சொல்லிக்கொள்ளும் நிலையில் இல்லை. பருவமழை போதுமான அளவு பெய்தால்தான் அதிகப்படியான உபரியான உற்பத்தி

கிடைக்கும். அப்படி இல்லாத சூழலில், சாகுபடி குறைந்து பக்கத்து மாநிலங்களிடமிருந்து தானியங்களை வாங்க வேண்டி இருக்கும். 1964–65இல் 894 லட்சம் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தி 1965–66இல் 723 லட்சம் டன்களாக அதாவது, கிட்டத்தட்ட அய்ந்தில் ஒரு பங்கு அளவுக்கு மேலும் குறைந்துவிட்டிருந்தது. மக்கள் கடுமையான பரிதவிப்பில் இருந்தனர். தேர்தலில் இதை ஒரு முக்கியப் பிரச்சினையாகப் பேசியது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் மக்கள் பரிதவிப்புக்குத் தீர்வு காண வேண்டும் என்று அண்ணா நினைத்தார்.

அண்ணாவின் சிந்தனை மக்களுடைய தேவைகளிலிருந்து, கோரிக்கைகளிலிருந்தும் எழுந்தது. அதாவது, கீழ்நிலையிலிருந்து உருத்திரண்டு வந்தது. இப்படிப்பட்ட ஒரு யோசனை அதற்கு முன் எங்குமே அமல்படுத்தப் பட்டிருக்கவில்லை. அரிசியைக் கொள்முதல் செய்வது, அதைச் சேமிப்பது. ஓரிடத்திலிருந்து தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பிவைப்பது. அதற்கான நிருவாகக் கட்டமைப்பை உருவாக்குவது, நிதியை ஒதுக்குவது என்று எல்லாவற்றையும் பற்றி புதிதாகச் சிந்திக்க வேண்டும். எனவே, அரசு இயந்திரம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இது சாத்தியமல்ல என்றது. அதற்கேற்ப அரிசி கையிருப்பும் போதிய அளவில் அன்று இல்லை.

அண்ணா எல்லாருடைய கருத்துக்கும் மதிப்பளிப்பவர், தான் சொன்னதே கட்டளை என்று அவர் எப்போதும் நினைத்ததேயில்லை. அதிகாரிகள் சுட்டிக்காட்டிய காரணங்களை அவர் கவனத்துடன் கேட்டார். அதேசமயம் ஏழை மக்கள் பசியைப் போக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் நினைத்தார். ‘ஒரு ரூபாய்க்கு 1படி அரிசியாவது தரப் பாருங்கள்” என்று அதிகாரிகளிடம் சொன்னார். இப்படித்தான் மக்கள் நலத்திட்டங்களுக்கு அரசு நேரடியாக மானியம் தரும் நடைமுறை தமிழ்நாட்டில் தொடங்கியது. இன்றைக்கு சமூக நலத்திட்டங்களில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

மூத்த உயர் அதிகாரிகளுக்கும் ஆட்சியாளர் களுக்கும் இடையிலான சுமூக உறவில் முதல் முறையாக இது கீறலை ஏற்படுத்தியது. இதுநாள் வரையில் அரசின் கொள்கைகள் மக்களுடைய தேவைகளுக்கேற்ப வகுக்கப்பட்டு, இருக்கும் கட்டமைப்புகள் வாயிலாகவே அமல்படுத்தப்பட்டன. புதிய ஆட்சியாளர்களுக்குப் புதிய புதிய சிந்தனைகள் தோன்றின. அவை அப்போதைய சட்டகத்துக்குள் பொருந்துவனவாக இல்லை. அவர்கள் அரசு அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசினார்கள்.

### அதிகார வர்க்கத்துடன் ஓர் உறவாடல்

பொதுவாக, இங்கு அரசு நிருவாகத்தில் மாவட்ட நிருவாகம் மீதும் மாவட்ட ஆட்சியர்கள் மீதுமான சார்பு அதிகமாக இருந்தது. மாவட்ட அளவில் அரசின் கொள்கைகளை அமல்படுத்தும் கரங்களாக ஆட்சியர்கள் இருந்தனர். தமிழ்நாட்டில் 1967–க்குப் பிறகு நிலைமை மாறியது. மாபெரும் மக்கள் இயக்கத்தால் உருவான கட்சி திமுக. ஆட்சியில் இருக்கும்போது மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்பதும் அவர்களுடைய எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வதும் முக்கியம் என்று திமுக கருதியது. கட்சித் தலைமையுடன் நேரடித் தொடர்பில் இருக்கும் அதன் மாவட்டச் செயலாளர்கள் அன்றாட நிருவாகம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களுடன் பேசத் தொடங்கினார்கள்.

கட்சியில் உள்ள நிருவாகிகள் மக்கள் சார்பில் கோரிக்கைகளுடன் அதிகாரிகளை அன்றாடம் சந்திப்பதை ஒரு இளம் அதிகாரியாக அப்போது நான் நேரில் பார்த்தேன். இது மிகப் பெரிய மாற்றம். பாசனத் தேவை, உணவு தானியத் தேவை. பள்ளிக்கூடங்களின் செயல்பாடுகள் இப்படி உள்ளூர் வளர்ச்சி தொடர்பான கோரிக்கைகளோடு வழக்கமான நிருவாகப் படிநிலைகள் வழியாக வராமல், மக்கள் குறைகளை நேரடியாக எடுத்துச் சொல்லித் தீர்க்குமாறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

காலம் செல்லச் செல்ல, அண்ணாவுக்குப் பிந்தைய அவருடைய வழித் தோன்றல்களின் காலகட்டத்தில் இது மேலும் வளர்ச்சியடைந்தது. கட்சித் தொண்டர்கள் அதிகாரிகளுக்குக் கோரிக்கை வைப்பது விதிவிலக்காக இல்லாமல் வழக்கமான ஒன்றாகிவிட்டது. இது அதிகார வர்க்கம் பிரச்சினைகளைப் பார்க்கும் கண்ணோட்டத்தையேகூட மாற்றியது.

### அதிகார இயந்திரத்தில் ஏற்பட்ட முகமாற்றம்

எல்லாவற்றிலும் முக்கியமாக அரசு வேலைகளின் முகம் மாறியது. அதாவது, பல்வேறு சமூகங்களும் உள்ளே நுழைந்தன. அண்ணா, அவரை அடுத்து வந்த கலைஞர் கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா என எல்லோருமே சேர்ந்து இதற்குப் பங்களித்தனர் என்று சொல்லலாம். குறிப்பாக 1960–1980 காலகட்டத்திய அரசு ஊழியர்கள் தரவுகளை ஆராய்ந்தால், அரசு வேலைக்கு வருவோரின் ஜாதிப் பின்னணி அடியோடு மாறியிருந்தது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அதிக அளவில் அரசுப் பணிகளில் உள்ளே நுழைந்தனர். இது அதிகார வர்க்கத்தின் கட்டமைப்பையே மாற்றியது. கூடவே, அதிகார வர்க்கத்தின் பண்பிலும் மாற்றம் உண்டானது.

நிலவுடைமையாளர்களும் இவற்றை நடத்திவந்தனர். பேருந்துப் போக்குவரத்து மாநில அரசுடைமையாக இருக்க வேண்டும் என்று அண்ணா கருதினார். 1967–1971 காலகட்டத்தில் அனைத்துப் போக்குவரத்துத் தடங்களும் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல போக்குவரத்துக் கழகங்கள் அரசுத் துறையில் தொடங்கப்பட்டன. விளைவாக, வணிக நோக்கில் பேருந்துப் போக்குவரத்து நடத்தப்பட்ட சூழல் மாறி, மாநிலத்தின் குக்கிராமங்களுக்கும் பேருந்துகள் சென்றடைவதற்கான இலக்கு உருவானது. புதிய சாலைகள் உருவாக்கப்பட்டன. கூடவே, மின் இணைப்புகள் சென்றன. இப்படியாக அரசு நிருவாகமும் போக்குவரத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து சென்றது பரவலான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டன.

### அரசு அதிகாரிகளுடன் இணக்க உறவு

இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் நடப்பதற்கான இணக்கச் சூழலையும் தனக்குப் பின் வரும் தலைவர்கள் அதிகாரிகளை எப்படி அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கான முன்னுதாரணத்தையும் அண்ணா உருவாக்கினார். தனது நிருவாகப் பொறுப்பிலுள்ள துறைகளையும் அங்கே கடைப்பிடிக்கப்படும் மரபுகளையும் அவர் மதித்தார். மூத்த அதிகாரிகளுக்கு உரிய மரியாதையை அளித்து அவர்களை மிகக் கண்ணியமாக நடத்தினார். அப்போது தலைமைச் செயலாளராகவும் வருவாய் நிருவாக வாரியத்தின் உறுப்பினர்களாகவும் பிராமணர்கள் இருந்தனர். புதிய அரசில் அவர்கள் மாற்றப்படலாம் என்று பலரும் நினைத்தார்கள். ஆனால், அண்ணா அப்படி நடந்துகொள்ளவில்லை. முழு நிருவாகச் சுதந்திரத்தை அவர்களுக்கு அளித்தார்.

ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது போராட்டக்காரர்களிடம் காவல்துறை கடுமையாக நடந்துகொண்டதாகப் பரவலான குற்றச்சாட்டு நிலவியது. புதிய அரசில் தங்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பல மூத்த அதிகாரிகளும் அஞ்சினர். அண்ணா முரண்பட்டார். இன்ஸ்பெக்டர் ஜெனரல் அருள் அந்தப் பதவியிலேயே நீடிக்க வழிவகுத்தார். மனம்போன போக்கில் அதிகாரிகளை இடமாறுதல் செய்து பந்தாடும் வேலையை அண்ணா செய்யவில்லை. நிருவாக அடுக்கிலும் வேண்டியவர்களைக் கொண்டு வருவதற்காகப் புதிய புதிய பதவிகளையும் அதிகாரப் படிநிலைகளையும் அவர் புகுத்தவில்லை. பதவியில் இருக்கும் அதிகாரிகளைக் கொண்டே, சரியாக எடுத்துச் சொல்லி தன்னுடைய வாக்குறுதிகளையும் சீர்திருத்தங்களையும் நிறைவேற்றிவிட முடியும் என்ற நம்பிக்கைச் சூழலை அவர் உருவாக்கினார்.

துல்லியமாகச் சொல்வதானால், அரசியல் சித்தாந்தம் அரசின் கொள்கைகளாகவும் திட்டங்களாகவும் மாற்றப்பட்டு, மக்களுக்குப் பலன்கள் வழங்கப்பட்டன. அரசு இயந்திரம் உண்மைத் தன்மையுடையதாகவும் பன்மைத்துவம் மிக்கதாகவும் புது முகம் பெற்றது. இப்படிப்பட்ட மாற்றத்துக்கு இந்தியாவில் அண்ணாவே முன்னோடி என, முன்னாள் செயலாளரும் பிரதமர் வாஜ்பேயி அரசில் பொருளாதார ஆலோசகராக இருந்தவருமான எஸ்.நாராயணன், அண்ணாவின் அரசு நிருவாகம் பற்றிய தனது கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

**திராவிட நாடு மத்திய அதிகாரத்தின் கீழ் இருக்காது**

பண்ணையாளர்கள், நிலவுடைமையாளர்களிடமிருந்து பெற்று ஏழை விவசாயிகளுக்கு நிலத்தைத் தானமாக அளிக்கும் பூதான இயக்கத்தை நடத்திய வினோபா பாவே தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது 1956இல் அண்ணாவைச் சந்தித்தார். தமிழ் மீது மரியாதை உடையவரான வினோபா பாவேவுக்கு அண்ணா மீது நல்லெண்ணமும் மதிப்பும் இருந்ததை உணர முடிந்தது. அண்ணாவை அவர் சந்திக்க விரும்பினார். காங்கிரசை அண்ணா கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த காலகட்டம். அது என்பதோடு, “திராவிடநாடு” கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்திக் கொண்டிருந்த காலகட்டமும்கூட. மேலும், பெரும் பண்ணையாளர்களிடமிருந்து நிலங்களைக் கையகப்படுத்தி, குடியானவர்களுக்கு வழங்கும் நிலச் சீர்த்திருத்தத்துக்காகவும் அண்ணா குரல் கொடுத்து வந்தார். காந்தியவாதியான வினோபா பாவே மீது பெரும் மதிப்பு அண்ணாவுக்கு இருந்தது. அதேசமயம், நிலச் சீர்திருத்தத்தைத் தள்ளிப்போட்டு வந்த காங்கிரஸ், வினோபா பாவேயின் பூதான இயக்கத்தை ஒரு கவசம்போலப் பயன்படுத்தி வருகிறது என்கிற எண்ணமும் அவருக்கு இருந்தது. இதுபோக, அண்ணாவை வினோபா பாவே சந்திப்பதை அவர் அருகில் இருந்த அன்றைய காங்கிரஸ் நிலவுடைமையாளர்கள் சிறிதும் விரும்பவில்லை. இத்தகைய சூழலின்தான் இந்தச் சந்திப்பு நடந்தது. தமிழ்நாட்டில் பிற்காலத்தில் தலித்துகளுக்கு வீடு, நிலம் கிடைப்பதற்காகத் தம் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்ட காந்தியவாதிகளான ஜெகந்நாதன் – கிருஷ்ணம்மாள் தம்பதி இந்தச் சந்திப்பின்போது உடனிருந்தனர். சந்திப்புக்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தவர் ஜெகந்நாதன். இந்தச் சந்திப்பு தொடர்பாக, ‘திராவிட நாடு’ பத்திரிகையில் நீண்ட கட்டுரை ஒன்றை எழுதிய அண்ணா, அதில் வினோபா பாவே உடனான உரையாடலையும் வெளியிட்டார். வினோபா பாவே ஹிந்தியில் பேசியிருக்கிறார். அண்ணா தமிழில் பேசியிருக்கிறார். மொழி பெயர்ப்பாளர் ஊடாக நடைபெற்ற அந்த உரையாடல் தொடர்கிறது...

வினோபா : உங்கள் கழகத்தின் நோக்கம்?

அண்ணா : நாங்கள், திராவிட நாடு கேட்கிறோம் – அறிவீர்களே..

வினோபா : உங்கள் கழகத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாம் அல்லவா... உதாரணமாக, நான் சேர விரும்பினால்?

அண்ணா : எங்களுடையது அகில இந்தியக் கட்சி அல்லவே, எனவே, இயல்பாகவே திராவிட நாட்டிலுள்ளோர்தான் உறுப்பினராகச் சேர விரும்புவர்.

வினோபா : திராவிட நாடு என்றால், தனி நாடாகவேவா?

அண்ணா : ஆமாம். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிவழி அரசுகள் அமைத்து, பிறகு அவற்றின் கூட்டாட்சியாகத் திராவிட நாடு ஏற்படுத்துவது.

வினோபா : மத்திய சர்க்காருக்கு என்ன அதிகாரம்?

அண்ணா : மத்திய சர்க்காரின் கீழ் இருக்கும் நிலைமையே எழாது.

தேவைப்படும்போது வெளிநாட்டு விவகாரம் குறித்துக் கலந்து பேசலாம், கூடிப் பணியாற்றலாம்.

வினோபா : அப்படி என்றால், தனி நாடு. அதாவது தனி அரசு, சிலோன்போல.

அண்ணா : ஆமாம்.

வினோபா : பாகிஸ்தான் போல் ஆகிவிடும்.

அண்ணா : நியாயமான கோரிக்கை மறுக்கப்பட்டால், பாகிஸ்தான் போல்தான் ஆகிவிடும்.

வினோபா : தனிநாடு என்றால், தனி ராணுவம்கூட இருக்கும்.

அண்ணா : ஆமாம், தனிப்படை இருக்கும்.

வினோபா : தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடமெல்லாம் ஒன்றாக இருக்குமா?

அண்ணா : எங்களுக்கு நம்பிக்கை உண்டு. ஏனெனில், நான்கு மொழிகளும் ஒரே மூலம் கொண்டவை.

வினோபா : நான் நான்கு மாதம் ஆந்திரத்தில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். தமிழர்களுடன் ஒன்றுகூடி அரசு அமைக்க விரும்பும் எண்ணம் ஆந்திரர்களிடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே?

அண்ணா : இப்போது அவ்விதமான எண்ணம் அங்கு இருக்கலாம். தாங்கள் ஆந்திரம் சென்ற தருணம், ஆந்திரர்கள் தமிழர்களுடன் ஒரே அரசில் இருந்ததால், தங்கள் வளர்ச்சி தடைப்பட்டது என்று எண்ணிக் கசப்பு அடைந்திருக்கும் நேரமாக இருந்தது. அவர்கள் இப்போது தனியாகிவிட்டார்கள். இப்போது அவர்களுக்கும் மத்திய சர்க்காருக்கும்தான் தொடர்பு. இப்போதும் தங்களுக்கு வளர்ச்சி இல்லை என்றால், அதற்குக் காரணம் தமிழரல்ல, மத்திய சர்க்கார்தான் என்று அறிந்து கொள்வார்கள். இப்போதே மைசூர், ஆந்திரம், கேரளம் ஆகிய பகுதிகளில் அய்ந்தாண்டுத் திட்டங்களில் சரியான முறையில் தமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்று எண்ணுகிறார்கள்.

வினோபா : மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால்தானே பிரிந்துபோக விரும்புகிறீர்கள்? நீதியாக நடந்து கொண்டால்?

அண்ணா : அப்படிப் பார்ப்பதைவிட இதுபோல் எண்ணக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால் சலிப்படைகிறோம் என்று கூறுவதைவிட, மத்திய சர்க்கார் என்று ஒன்று இருந்தால், அநீதிதான் நடக்கும் என்று கொள்ள வேண்டுகிறேன். மேலும், நீதியாக நடக்கக்கூடிய கடைசித் தலைமுறையே இப்போது வடநாட்டில் உள்ளது என்றும் நாங்கள் நினைக்கிறோம். இனி வரக்கூடிய தலைமுறைகளில், அநீதி இன்னும் அதிகமாக இருக்கும்.

வினோபா : நீங்கள் நான்கு மொழிப் பிரதேசத்தையும் கூட்டாட்சி ஆக்கின பிறகு, உங்கள் ஆட்சியிலே அதிருப்தி யாருக்கேனும், எந்தப் பகுதிக்கேனும் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?

அண்ணா : பிரிந்துபோக உரிமை தருகிறோம்.

வினோபா : தனி நாடு ஆகும்.

அண்ணா : ஆகலாம்.

வினோபா : அதாவது, அன்புடன் ஒன்றாக இருக்கலாம். இல்லையானால், பிரிந்துபோக வேண்டியது அதுதானே?

அண்ணா : ஆம் அய்யா.. ஒன்றுசேர்ந்து இருப்பது என்பது ஒரு விஷயம். அந்தப் பெயரைக் கூறிக்கொண்டு ஒன்றின் கீழ் ஒன்று என்ற நிலைமை ஏற்படுவது வேறோர் விஷயமல்லவா?

வினோபா : இதை நான் புரிந்துகொண்டேன் இது அஹிம்சா முறையில் தானே நடைபெற வேண்டும். வன்முறை கூடாதல்லவா?

அண்ணா : வன்முறை கூடாது. வன்முறை என்றால், ஆயுத வன்முறை மட்டுமல்ல, தத்துவ வன்முறை புகுத்துவதும் கூடாது.

வினோபா : அப்படியென்றால்?

அண்ணா : தேச ஒற்றுமை, தேசியம் போன்ற ஏதேனும் தத்துவங்களையே கருவியாக்கி வன்முறைப் படுத்துவது கூடாது.

வினோபா : அஹிம்சைதானே முறை?

அண்ணா : ஆமாம்.

வினோபா : அப்படியானால், தனி நாடு, அதிலே தனியாகப் படையும் இருக்கும் என்கிறீர்களே, ஏன் படை?

அண்ணா : மற்றவர்களிடம் படை இருப்பதால் ஏற்படும் ஆசைதான் அதற்குக் காரணம். தாங்கள் இப்போது, மாநாட்டிலே இந்திய சர்க்காருக்குக்கூடக் கூறியிருக்கிறீர்கள், படை குறைக்க பாபு ராஜேந்திர பிரசாத்கூட கேட்டுக் கொண்டிருந்தார். பார்ப்போம், அவர்கள் படை குறைவதை.

வேறொருவர்: பாபு ராஜேந்திர பிரசாத் அவ்விதம் கூறவில்லையே?

வினோபா : இல்லை – நான் கூறியபோது பாபு ராஜேந்திர பிரசாத் இருந்தாரல்லவா? சரி... இதேபோல வங்காளம், மராட்டியம் இவையெல்லாம் பிரிந்துபோக விரும்பினால்?

அண்ணா : பிரியலாம், ஆனால், அது அந்தந்த இடத்து மக்களின் உணர்ச்சியைப் பொறுத்திருக்கிறது.

வினோபா : இப்படிச் சிறுசிறு நாடுகளாகி விட்டால், சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் பிடித்து அழிக்குமல்லவா?

அண்ணா : அப்படிக் கூறிவிடுவதற்கில்லை. சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் தாக்காதபடி தங்களைப் போன்றவர்கள் உபதேசிக்கும் அஹிம்சையும் ஆத்ம சக்தியும் பயன்படுமல்லவா?

வினோபா : அரசியல் விஷயத்தில் உங்கள் எண்ணம் அறிந்துகொண்டேன். சமுதாய சம்பந்தமாக உங்கள் கட்சிக் கொள்கை என்ன?

அண்ணா : தங்களுக்குத் திருமூலர் தெரியுமென்று எண்ணுகிறேன். ‘ஒன்றே குலம்... ஒருவனே தேவன்” என்பதைத்தான் நாங்கள் கொள்கையாக்கிக் கொள்கிறோம்.

வினோபா : பொருளாதாரத் திட்டம் என்ன?

அண்ணா : மனிதனுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, குடியிருக்கும் இடம் ஆகியவை சர்க்காரால் அனைவருக்கும் உறுதி அளிக்கப்பட வேண்டும்.

வினோபா : அதாவது, சுரண்டல் கூடாது?

அண்ணா : அப்படிச் சொல்வதைவிட, நான் வேறுவிதமாகக் கூற விரும்புகிறேன். இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் பொறுத்த தொழில்கள் லாப

நோக்கத்துக்காக நடத்தப்படக் கூடாது.

வினோபா : அப்படியானால், அந்தந்தக் கிராமத்து நிலம், கிராமச் சொத்தாக இருக்க வேண்டும்?

அண்ணா : ஆமாம் – அதிலே உழைத்துப் பெறக்கூடியது. அந்தந்தக் கிராம மக்களுக்குப் போதுமானதாக இல்லாவிட்டால், சர்க்கார் தேவைப்படும் அளவு தர வேண்டும்.

வினோபா : அதிகமாக இருந்தால் சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம்.

அண்ணா : ஆமாம்.

வினோபா : (அரியநாயகம் என்பவரைப் பார்த்து) பார்த்தாயா, நான் சொன்னேனே.நம் கொள்கையே தான். (என்னைப் பார்த்து) கட்சி முறையில் பூமி தான இயக்கத் துக்கு என்ன செய்கிறீர்கள்?

அண்ணா : கட்சி அடிப்படையில் நாங்கள் ஈடுபடுவதற்கு இல்லை. சங்கடம் உண்டு, எம் கட்சி இதில் ஈடுபட்டால், அதனாலேயே வேறு சில கட்சிகளுடைய பகை, தங்கள் இயக்கத்துக்கு ஏற்பட்டுவிடக்கூடும்.

ஜெகந்நாதன்: தனிப்பட்ட முறையில் கழகத் தோழர்கள் பல இடங்களில் நமக்குத் துணையாயிருக்கிறார் கள்.

வினோபா : நீங்கள் தனிப்பட்ட முறையில் என்ன செய்கிறீர்கள்?

அண்ணா : தங்கள் நல்ல நோக்கத்தை மக்களுக்குக் கூறுகிறேன். நல்லவர், அவரை ஏமாற்றி விடாதீர்கள்.. என்று கூடச் சொல்லிவருகிறேன்.

வினோபா : தனிப்பட்ட முறையில் ஏதேனும் உதவுகிறீரா?

அண்ணா : என்னாலான உதவிகளை மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறேன்..

அண்ணா : பழக்கமில்லாமலென்ன, வருகிறேன்.

ஜெகந்நாதன்: மறுபடியும் வாருங்கள் பார்க்க.

அண்ணா : அதெற்கென்ன... இன்னும் ஒரு மாதம் கழித்து மறுபடி வந்து பார்க்கிறேன்.

பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வினோபா புறப்பட்டார். நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சில நிமிட நேரம் அளவளாவிவிட்டு, ஆற்றைக் கடந்து ஊர்வந்து சேர்ந்தேன். உள்ளமோ வினோபா பாவேவின் முயற்சி பற்றியும் அதற்குத் துணை நிற்பதாகக் கூறிடும் துதி பாடகர்களாலேயே எந்தெந்த வகையில் அது குலைக்கப்பட்டு வருகிறது என்பது பற்றியும் எண்ணிற்று. அதுபற்றி பிறகு...

**‘திராவிடநாடு’ இதழ்** அன்பன்,
17.06.1956 **அண்ணாதுரை**

### என் தேசம் இறவாமல் காத்தவர் – அண்ணா!

பாகிஸ்தானில் உருது ஆதிக்க ஆட்சியி லிருந்து ‘கிழக்கு பாகிஸ்தான்’ விடுதலை யடைந்து, ‘வங்கதேச மக்கள் குடியரசு’ என்ற நாடு 1971இல் உருவானபோது, அரசியல் விடுதலை, பிரதேச எல்லை விடுதலை என்பதைத் தவிர, இன்னொரு வகையிலும் அந்த விடுதலை முக்கியத்துவம் பெற்றது. வெவ்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளை ‘ஒரே மதம்’ என்ற பிணைப்பு இணைக்கும் பசையாகச் செயல்படும் என்ற நம்பிக்கையைத் தகர்த்த விடுதலை அது.

தெற்காசிய மக்களை ‘ஒரே நாடு’ என்றோ, இரு நாட்டவர் என்றோ கட்டுப்படுத்திவிட முடியாது, அவர்கள் பல தேசிய இனத்தவர், என்பதையே வங்கதேச விடுதலை எண்பித்திருக்கிறது. பல தேசிய இனங்களுள் நாட்டில், பல்வேறு இனங்களிலிருந்து பல தந்தையர் உருவாகின்றனர். அப்படி உருவானவர்களில் முதன்மையானவர் அண்ணா என்றே நினைக்கிறேன். தமிழர்களின்

தலைவர், இன்று பல்வேறு இன மக்களுக்கும் ஆதர்சனமாகத் திகழ்கிறார். அண்ணா ஒரு மாநிலத்துக்கு, ஓர் இனத்துக்கு மட்டும் சொந்தமல்ல, உலக வரலாற்றில் இடம்பெற வேண்டிய தலைவர் என்பதை அவரது அரசியல் பணி உணர்த்துகிறது.

**இந்தியாவைக் காக்க அண்ணா வழியே உகந்தது**

இந்தியக் குடியரசின் ஜனநாயகமும் ஒற்றுமையும் அதன் கூட்டாட்சிக் கட்டமைப்பில்தான் வாழ்கின்றன. இதை உணர்ந்திருந்ததால்தான் 1946இல் இந்திய சுதந்திரம் தொடர்பாக இறுதிசெய்ய, பிரிட்டனிலிருந்து வந்த கேபினட் அமைச்சர்களைக் கொண்ட தூதுக் குழு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கும் கூட்டமைப்பாக இந்தியாவைச் சிந்தித்தது. மத்திய அரசுக்கு வெளியுறவுத்துறை, ராணுவம், ரூபாய் நோட்டு அச்சடிப்பு தகவல் தொடர்பு, ரயில்வே போன்றவை மட்டும் பொறுப்புகளாக இருக்கும். ஏனையவை அனைத்தும் மாநிலங்களின் அதிகாரத்தில்.. அதாவது இப்போதைய அய்ரோப்பிய ஒன்றியத்தைவிடச் சற்றே நெருக்கமாக நாடுகளின் கூட்டமைப்பாக இந்திய அரசு இருந்திருக்கும் அண்ணாவும் இதையே வலியுறுத்தினார் என மேற்கு வங்க, வரலாற்று ஆய்வறிஞர் கர்க சட்டர்ஜி அண்ணாவைப் பற்றி தான் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அண்ணாவின் சாதனையாக, மொழி உரிமையின் வரலாற்றுத் திருப்பு - இந்திய அரசியலில் ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தை பதிவு செய்துள்ளார்.

ஒரு வங்காளி என்ற முறையில் கூறுகிறேன். அண்ணா இப்போதும் வாழ்கிறார். ஆதிக்கவாதத்துக்கு எதிராக, தேசியம் போராட்டம் நடத்தும் போதெல்லாம் அண்ணா வாழ்வார். அண்ணா இன்னமும் வாழ்கிறார் என்று ஏன் கூறுகிறேன் என்றால், வங்காளியான என் மீது ‘ஹிந்தி படிப்பது கட்டாயம்’ என்று மத்திய அரசால் திணிக்க முடியவில்லை. 1965இல் அண்ணா தலைமை தாங்கி நடத்திய ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம்தான் இதற்கு முக்கியக் காரணம். அந்தப் போராட்டத்தால்தான் ஹிந்தி பேசாத நாங்கள் அனைவரும் நிரந்தர மூன்றாம் தரக் குடிமக்களாகிவிடாமல் தப்பித்தோம். அதேசமயம், இந்திய தேசத்தின் இரண்டாம் தரக் குடிமக்களாக, என்றாவது ஒருநாள் முதல் தரக் குடிமக்களாகிவிட வேண்டும் என்ற கனவுகளோடு வாழ்கிறோம். இது தள்ளிப்போடப்பட்ட கனவாகத்தான் இருக்கிறது.

**உண்மையான தேசியத்தை அண்ணா சிந்திக்கவைக்கிறார்**

ஹிந்தி ஆதிக்கத்துக்கு முன் அண்ணாவும் அவருடைய தம்பிகளும் அடிபணியாமல் நின்று, பிற தேசிய இனங்களுக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டுகளாகியிருக்கிறார்கள். அப்படித் தனித்து நின்றதன் மூலம் தேசியம் என்றால், அதாவது உண்மையான தேசியம் என்றால் என்ன என்று அனைவரையும் சிந்திக்க வைத்திருக்கிறார்கள். இப்போது இந்திய ஒன்றியத்துக்கு மிகப் பெரிய பதற்றத்தைத் தருவது இந்த விஷயம்தான். ஹிந்தி பேசாத மக்களுக்கான இடம் எது என்று வரையறுக்க, ஹிந்தி பேசும் ஆதிக்க வகுப்பு முற்படுகிறது. பெருமுதலாளித்துவத்தின் ஆதரவில் செயல்படும் ஜனநாயக எதிர்ப்புச் சக்திகள் மூலம் தேச ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தேசியவாதிகள் கூறும் விளக்கம் நம்மை எங்கே இட்டுச்செல்கிறது என்று பார்க்க வேண்டும். கூட்டாட்சி அமைப்பை ஆக்கிரமித்துள்ள டில்லி ஆதிக்கவாதிகள், எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள், ‘நீங்கள் முதலில் இந்தியரா அல்லது வங்காளியா?” இப்படிக் குடியுரிமையையும் தேசிய அடையாளத்தையும் வேண்டும் என்றே மோத விடுகிறார்கள். இப்படி நம்முடைய கடந்த காலத்தைச் சிதைத்து, நிகழ்காலத்தை அடிமைப்படுத்தி, எதிர்காலத்தை நிர்மூலமாக்க நினைக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடத்தான் அண்ணா நமக்கு மிகவும் தேவைப்படுகிறார்.

தேசிய இனத்தால் நான் வங்காளி, குடியுரிமையால் நான் இந்தியன், நான் ஏன் இந்தியனாக இருக்கிறேன் என்றால், வங்காளியாக வங்காளத்தில் பிறந்ததால்தானே தவிர, இந்தியாவில் பிறந்ததால் வங்காளியாகிவிடவில்லை. முதலில் இந்தியனாக என்னை அனுமதித்துவிட்டு, அதன் பிறகு வங்காளியாகவோ தமிழனாகவோ போக விருப்பமா என்று யாரும் என்னைக் கேட்கவில்லை. என்னுடைய தேசிய அடையாளம் என்பது விரும்பித் தேர்வு செய்வதல்ல. அது இயற்கையாக வருவது. என் தாய் என்னிடத்தில் முதலில் பேசிய வார்த்தைகள் வங்கமொழியிலானவை. அவளும் நானும் பேசிக்கொண்டது வங்காளியில். என்னுடைய குடியுரிமை இன்று இந்தியாவுடையது. நாளையே அது கனடா நாட்டினுடையதாக மாறலாம் – நானும் பாலிவுட் நட்சத்திரமும் பா.ஜ.கவின் ஆதரவாளருமான அக்ஷய் குமாரைப் பின்பற்றினால்! வங்காளியாகப் பிறந்த நான் எந்த நாட்டில் இருந்தாலும் வங்காளியாகத்தான் மடிவேன் – தாய் நாடான வங்காளத்தில் மடியவே நான் விரும்புகிறேன்.

நான் எழுதும் வார்த்தைகள் பலருக்குக் கோபத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தலாம்.. பலருடைய புருவங்கள் உயரலாம். கடுமையான வசைகளால் என்னை அர்ச்சிக்கலாம். இனி என் குரல் எழும்பாதபடிக்கு என்னை மவுனமாக்கும் வேலையைக்கூடச் சிலர் செய்யலாம். அந்த மவுனத்திலும், மாநிலங்களவையில் அன்றைய மத்திய அரசைப் பார்த்து அண்ணா பேசிய வார்த்தைகள் வாழும். "பலப்பிரயோகம் செய்து அமைதியை ஏற்படுத்தாதீர்கள்.. இதயத்திலிருந்து பேசி, சமரசத்தை ஏற்படுத்துங்கள். அடிப்படை மனித உரிமைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுங்கள் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்களை வேண்டிக்கொள்கிறேன். மக்களுக்கு உண்மையை உணர்த்தும் உங்களுடைய உரிமையைப் பயன்படுத்துங்கள்.. ஆனால், மாற்றுக் கருத்துகளை யாரும் பேசக்கூடாது. எழுதக்கூடாது என்று தடை விதிக்கும் சட்டங்களை இயற்றாதீர்கள்.."

இந்நாட்டில் ஹிந்தி பேசாதவர்கள் 'யாரும் என் வாயை அடைத்துவிட முடியாது" என்று உறுதியேற்கும்போது, நீதிக்காகக் குரல் கொடுக்கும்போது – அண்ணா வாழ்கிறார். இவ்வாறு தனது கட்டுரையில் வங்காள ஆய்வறிஞர் கர்க சட்டர்ஜி பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா 27.06.1967 அன்று சட்டமன்றத்தில் அன்னைத் திருநாட்டுக்கு 'தமிழ்நாடு" என பெயர் மாற்றத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார். தொடர்ந்து சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் மற்றும் இருமொழிக் கொள்கை ஆகிய திராவிட இயக்க லட்சியங்களையும் சட்டமாக நிறைவேற்றி சாதனைகளைப் படைத்தார், வரலாற்றில் உயர்ந்து நின்றார். இத்தகைய சாதனைகளைப் படைத்துவிட்டு சட்டமன்றத்தில் உரையாற்றும்போது ''நான் இன்று கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டங்களை யார் மாற்ற நினைத்தாலும், யார் ஆட்சியிலிருந்தாலும், அப்படி மாற்ற நினைக்கின்றவர்கள் மனதிலே ஓர் அச்ச உணர்வு ஏற்படும், அப்படி ஓர் அச்ச உணர்வு ஏற்படுகின்றவரை, இந்த நாட்டை அண்ணாதுரைதான் ஆள்கின்றார் என்று பொருள்" என்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த உரையை நிகழ்த்தினார் பேரறிஞர் அண்ணா.

ஆம்! இப்போதும், அய்ம்பத்தாறு ஆண்டுகள் கடந்தும் தமிழ்நாட்டை அண்ணாதான் ஆள்கின்றார்!..

**குறிப்புதவி நூல்கள்** :


1. ஆழி செந்தில்நாதன் கட்டுரை – நூல்: மாபெரும் தமிழ்க்கனவு,இந்து தமிழ்த் திசை வெளியீடு.
2. செல்வ புவியரசன் கட்டுரை – நூல்: மாபெரும் தமிழ்க்கனவு, இந்து தமிழ்த் திசை வெளியீடு.

3. சமஸ் கட்டுரை – மாபெரும் தமிழ்க்கனவு,இந்து தமிழ்த் திசை வெளியீடு.
4. பேரா தொ.பரமசிவன் பேட்டி – மாபெரும் தமிழ்க்கனவு, இந்து தமிழ்த் திசை வெளியீடு.
5. டி.ஜே.எஸ்.ஜார்ஜ் கட்டுரை – மாபெரும் தமிழ்க்கனவு, இந்து தமிழ்த் திசை வெளியீடு.
6. எஸ்.நாராயணன் அய்.ஏ.எஸ்(ஓய்வு) கட்டுரை – மாபெரும் தமிழ்க்கனவு, இந்து தமிழ்த் திசை வெளியீடு.
7. திராவிட நாடு இதழ் ஜூன்–1956
8. கர்க சட்டர்ஜி கட்டுரை – மாபெரும் தமிழ்க்கனவு, இந்து தமிழ்த் திசை வெளியீடு.

---

**ஆசிரியர் குறிப்பு :**

**ஆ.செல்லப்பாண்டியன்** *மதுரை மாவட்டம் திருவேடகத்தில் 1949இல் பிறந்தவர். தொலைத்தொடர்புத் துறையில் 40 ஆண்டுகள் பணியாற்றி, 2008இல் முதுநிலை மேற்பார்வையாளராகப் பணி நிறைவு பெற்றவர். தொழிற்சங்கத்தில் 50 ஆண்டுகள் கடந்து பொதுவாழ்க்கைப் பயணம் செய்தவர்; செய்பவர். தொழிற்சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ள இவர், தொலைத்தொடர்புத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் 16 ஆண்டுகள் தமிழ் மாநிலச் செயலாளராகப் பணியாற்றியவர். அகில இந்திய தொலைத்தொடர்பு தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் பொறுப்புகளில் இருந்தவர். தற்போது தொ.தொ.மு.சங்கத்தின் அகில இந்திய தலைவராக உள்ளார். இந்தியாவில் 14க்கும் மேற்பட்ட மாநிலங்களில் நடைபெற்ற அகில இந்திய மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்கேற்றவர்.*

“இந்துக் கொள்கைப்படி தீட்டு என்பது என்ன? அது உண்மையல்லாத மனக் கற்பனையாகும். அது ஆரியர்களும், ஆரியரல்லாத இந்துக்களும் சமுதாய உறவு கொள்ளும்போது எழும் காந்த சக்தியின் அளவைக் குறிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். யார் யார் பிராமண ஆச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும் எந்த அளவு பின்பற்றவில்லையோ அந்த அளவு தீட்டின் அளவு அதிகமாகிவிடும். பறையர் சமுதாயத்தைச் சேர்ந்தோர் (பிராமண ஆச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றுவதில்) கொஞ்சம் கூட அக்கறை காட்டாதவர்களாகவும், அப்படி ஈடுபாடு கொள்ளாமல் இருப்பதில் பிடிவாதமாகவும் இருந்தனர். அதன் விளைவாக, ஜாதி இந்துக்களின் முன்னால் முப்பது கஜம் சுற்றளவிற்கு அவர்கள் வருவது கூடத் தீட்டாகக் கருதப்பட்டது.”

**பேராசிரியர் சீனுவாச அய்யங்கார், பக்கம் 60, திராவிட இயக்க வரலாறு தொகுதி-1, முரசொலி மாறன்**

### Self-Respect and Rationalism: Enduring Relevance in Contemporary India
**- Dr. R.Saravanan**

Self-respect as an idea would survive till men continued to think rationally. Rooted in rationalism, Self-Respect Movement waged a critique of tradition and provided a space for human treatment which aimed ultimately to give up the practices of inhuman treatment in social, cultural and political spheres. The achievements are the results of the combined efforts of individual, society and polity. This paper addresses these issues with contemporary relevance.

### The Revolutionary Reformer and the Visionary Leader: The Legacy Of Dravidian Feminism
**- D.Durugalakshmi and Dr. B.R.Veeramani**

This study explores the concept of Thanthai Periyar and Dr. K. Veeramani showing how the feminist principles of one generation was carried forward to the next generation. It highlights the significance of Dravidian movement as a paradigm of gender equality, rational thinking and social transformation and demonstrates how their ideas continue to inspire defiance against the oppression of women in contemporary Tamil society.

### Deconstructing Dharma : Gender, Power and the Manusmirithi
**- Bhavadharini Kandhasamy and Dr. Veeramani Ramachandran**

The Manusmriti is one of the most important Hindu legal and ethical texts, traditionally attributed to the sage Manu. It is a part of Dharmashastra literature and has had a profound influence on Hindu law, social norms, and religious thought across centuries. Feminist analyses argue that Manusmriti institutionalized gender inequality, shaping social customs that marginalized women for centuries.

### வள்ளுவர் பார்வையில் அறம்
**– முனைவர் இர.பிரபாகரன்**

‘பல்வேறு நாகரிகங்களில் சிந்தனையாளர்கள் ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதன் பொருள் என்ன என்பதை விளக்க முயன்றுள்ளனர்’ என்று சுட்டும் இக்கட்டுரை அதற்கு உலக அளவில் இருந்த பல சிந்தனையாளர்களைச் சுட்டிக்காட்டி வள்ளுவர் எப்படி அவர்களிடமிருந்து வேறுபடுகிறார் என்பதை நுட்பமாக எடுத்துக்காட்டுகிறது.

### திருவள்ளுவர் இறை நம்பிக்கையளரா? ஒரு பெரியாரிய வாசிப்பு
**– பேரா. வெ.முருகன்**

பெரியாரியப் பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதை, ஜாதி ஒழிப்பு முதலியன திருக்குறள் வாசிப்புவழி விளக்கம் பெறுகின்றன என்பதும் திருக்குறள் வாசிப்புக்குப் பெரியாரியப் புரிதல் துணைபுரிகின்றது என்பதுமே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

### பேரறிஞர் அண்ணாவின் பேராளுமை
**– ஆ.செல்லப்பாண்டியன்**

பேரறிஞர் அண்ணா அவர்களின் பல்வேறு ஆளுமைப் பண்புகளை அதன் விழுமியங்களை விளக்கிட இக்கட்டுரை முயற்சி செய்கிறது. அரசியல் தளத்தைப் போல கலாச்சாரத் தளத்தை அண்ணா எப்படிப் பயன்படுத்தினார் என்பதையும், அவரது ஆட்சி எப்படி இன்றுவரை தமிழ்நாட்டில் தொடர்கிறது என்பதையும் ஆய்வு நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

PERIYAR MANIAMMAI
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University)
think • innovate • transform
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu